# சுதந்திரப் பறவைகள்



பறவை 7 ★ தை - 1992 ★ தமிழீழம் ★ பாடல் 1

உத்தமப் பெண்ணென்று
பேர் வாங்க வேண்டுமென்றால்
உன்னையே கருக்கு.
வீட்டுக்குள் உன்னை
முழுமையாய் முடக்கு.
மனம் விட்டுச் சிரிக்க
எண்ணுகின்றாயா?
வேண்டாம்.
நீ சிரித்தால்
குடும்பம்
சீரழிந்து போகும்.
நுகர்வுப் பொருள்
மட்டும்தான்
நீ என்பதை
நாளும் நாளும்
நினைவு கூர்ந்து கொள்.
இப்படி ...... இப்படி .....
ஆதிக்கக் கருத்துக்களால்
அமுத்தி வளர்க்கப்பட்டு,
மூடக் கொள்கைகளால்
முழுதாய் முடக்கப்பட்டு,
முதுகெலும்பின்றி
முடமாய் வாழ்ந்தது போதும்.
ஆற்றலும், அறிவும்
ஆளுமைத் திறனும்
நீக்கமற உன்னுள்
நிறைந்து தான்
உள்ளன.
வீரமும் விவேகமும்,
தீரமும், தியாகமும்.
உன் உணர்வுக்குள்
உறைந்து தான்
உள்ளன.
இந்த
உண்மையை
உணர்ந்து கொள்.
உறுதியுடன்
நிமிர்ந்தெழு.
போர்க்களத்தில் மட்டுமல்ல
சமூகச் சுழலுக்குள்ளும் தான்
நீ போராட வேண்டியுள்ளது.
போராடு - போராடு
இறுதிவரை போராடு
இரும்புச் சுவர்கள்
உடை படும்
உண்மை வாழ்வு
நிச்சயம் ஒளிர்ந்திடும்.

(முன் அட்டைப் படக் கவிதை)

**போர்க்களத்தில் மட்டுமல்ல**
**சமூகச் சுழலுக்குள்ளும்தான்**

## எங்கள் பார்வையில்

# எதிரியின் சவாலை எதிர்கொள்ள தயாராவோம்

சிங்கள அரசானது சமாதானத்தின் கதவுகளை மூடிவிட்டு, பெரிய அளவிலான ஒரு போருக்கு தயார் செய்து வருகிறது. எமது எல்லைகளில் பெருந்தொகையில் ஆயுதப்படைகள் குவிக்கப்பட்டு வருகின்றன. தமிழீழ மக்கள் என்றுமில்லாதபடி ஒரு பெரிய யுத்தத்தை சந்திக்கப்போகின்றார்கள். யாழ்ப்பாண குடாநாடு மீதே எதிரி தனது முழு ஆட்பலத்தையும் பிரயோகிக்க திட்டமிட்டிருக்கிறான்.

ஏற்கனவே சிங்களப் பேரினவாதத்தின் அழிப்பு நடவடிக்கையால் பெருந் துன்பத்தை சுமந்து வரும் எமது மக்கள் தொடர்ந்தும் பேரழிவுகளை எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய சூழ்நிலை எழுந்திருக்கிறது. இந்தப் போரானது தவிர்க்க முடியாத ஒரு நிர்ப்பந்தமாக எம்மீது திணிக்கப்படுகின்றது. எனவே எதிரியின் இந்தச் சவாலை எதிர்கொள்வதைத் தவிர எமக்கு வேறுவழி இல்லை,

தமிழீழ மக்களுக்கெதிராக ஏவப்பட்டு வரும் யுத்தத்தால் பெரும் பாதிப்பு அடைபவர்கள் பெண்களே. கணவனை இழப்போரும், பிள்ளைகளைப் பறிகொடுப்போரும், வீட்டை இழந்து அகதிகளாக அலைவோரும், எதிரிபடைகளின் பாலியல் வன்முறைக்கு ஆளாவோரும் பெண்களே. அத்துடன் எதிரியின் ஆக்கிரமிப்பு யுத்தத்தால் எழும் பாரிய சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் பெண்ணினமே முகம் கொடுத்து வருகிறது. இந்த தாங்கொணா கொடுமைகளின் எதிர் விளைவாகவே இன்றைய இளம் பெண்பரம்பரை ஆயுதமேந்திப் பெண்புலிகளாக களத்தில் குதித்திருக்கிறது.

தமிழீழ தேசத்திலுள்ள எல்லாப் பெண்களுமே ஆயுதமேந்திப் போராட வேண்டுமென நாங்கள் கூற வில்லை. எனினும் ஒரு தேசிய யுத்தத்தில் எமது உயிரை, உடைமையை, எம்மண்ணை, எமது மானத்தை காக்க வேண்டிய ஒரு விடுதலைப்போரில் புலிகள் இயக்கத்திற்கு பக்கபலமாக நாம் பல்வேறு வழிகளில் பங்களிப்புச்செய்யலாம். தமிழர்கள் என்ற ரீதியில் தமிழ்ப்பெண்கள் என்ற வகையில் இது எமது தேசிய கடமை.

பெருஞ்சமர் ஏற்படும் சந்தர்ப்பத்தில் பெண்கள், பொதுமக்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடலாம். பொது இடங்களில் திறந்த அகழிகளை அமைத்தல், முதலுதவி அறிவைப் பெற்று காயமடைந்தவர்களுக்கு உடன் சிகிச்சை செய்தல், இடம் பெயர்ந்து வரும் மக்களுக்கு உதவுதல், மக்கள் மத்தியில் பொய்யான வதந்திகள் பரவுவதை தடுத்தல் என்ற பல பொதுவான வேலைகள் மட்டுமன்றி மல் இன்னும் பல கடமைகள் பெண்களுக்காக காத்திருக்கின்றன.

ஒவ்வொருவரும் தத்தம் வீடுகளில்

திறந்த அகழிகளையோ அல்லது பதுங்கு குழிகளையோ அமைத்துக் கொள்ளலாம். வீடுகளில் பயிர்ச்செய்கையில் ஈடுபடலாம். தேவையான உணவுவகைகளைச் சேகரித்து வைப்பதில் கவனம் செலுத்தலாம்.

சமர்க்களத்திலும் பல வேலைகள் உள்ளன. போராளிகளுக்கு காப்பரண்கள், தடுப்பரண்கள் அமைப்பதில் உதவி செய்து கொடுக்கலாம். எதிரியின் நடமாட்டத்தை உன்னிப்பாகக் கவனித்து போராளிகளுக்கு தகவல் கொடுக்கலாம். போராளிகள் பாது காப்பிடங்களுக்கு செல்ல உதவி செய்ய லாம். போராளிகளுக்குத் தேவையான உணவுகளைத் தயாரித்துக் கொடுக்கலாம்.

இப்படியாக பெண்கள் போர்ச் சூழ் நிலைக்கேற்றவாறு பல வழிகளில் போராட் டத்திற்கு பங்களிக்கலாம்.

'எதிரியின் எந்தச் சவாலையும் துணி வுடன் எதிர் கொள்வோம்' என்ற உறுதி யுடன் தமிழீழப் பெண்கள் வரவிருக்கும் சமருக்கு தங்கள் பங்களிப்பை வழங்க ஆயத்தமாகட்டும்.

---

மாவீரர் நாளை முன்னிட்டு தலைவர் வே. பிரபாகரன் விடுத்த செய்தியிலிருந்து...

*நீண்ட விடுதலைப் பயணத்தில் சோர்வுகள் எம்மை ஆட்கொள்ளலாம். போராட்ட வாழ்வின் பெரும் சுமை கள் எம்மை அழுத்திப் பிடிக்கலாம். மேலும் பழுக்கள் எம்மீது சுமத்தப்படலாம். ஆனால் நாம் ஒரு சத்திய இலட்சியத்தில் பற்றுக்கொண்டு உறுதி கொண்ட மக்களாக ஒன்று திரண்டு நின்றால் எந்தவொரு சக்தியாலும் எம்மை அசைக்கவோ அழிக்கவோ முடி யாது. வீரசுதந்திரம் வேண்டிநிற்கும் மக்களுக்கு உறுதிதான் வலுமிக்க ஆயுதம்.*

*இன்று எமது மாவீரர்களின் கல்லறைகளிலிருந்து ஒலிக்கும் சுதந்திர கீதமும் உறு தியின் உன்னதத்தைத்தான் பாடுகிறது.*

# உலகப் பெண்ணினத்தின் இன்றைய நிலை

பல வருடங்களாக பெண்ணுரிமை வாதிகள் பெண்களின் பின் தங்கிய நிலை பற்றி கருத்துக்களை வெளியிட்டு வந்தனர். ஆனால் விஞ்ஞான வழிமுறைகளில் தங்கள் வாதத்தினை உறுதியான புள்ளி விபரங்களுடன் ஆராய்ந்து வலுப்படுத்தத் தவறி விட்டனர் என்றே சொல்ல வேண்டும். ஆனால் தற்போது பெண்களின் பொருளாதார சமூக, அரசியல் நிலைமைபற்றி புள்ளி விபரங்களுடன் ஆராய்ந்து புதிய பதிப்பிதழ் ஒன்று வெளியாகியுள்ளது. உலகின் பெண்கள் 1970 - 1990 என்ற தலைப்பில் ஐக்கிய நாடுகள் புள்ளி விபரக் கிளையினால் ஐக்கிய நாடுகள் சபையின் வேறு பல பிரிவுகளின் துணையுடன் இந்நூல் வெளிவந்துள்ளது. இந்நூலானது 178 நாடுகளிலிருந்து, பெண்களின் விவாக மாதிரிகள், மழலைப்பேறு, கல்வி நிலை, அரசியற் பங்களிப்பு போன்ற விடயங்களை துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பெரஸ்-டி-குயிலர் தனது முகவுரையில், 'அரசியலதிகாரம், பொருளீட்டல், சம சந்தர்ப்பங்கள் என்ற விடயங்களை எடுத்துக் கொண்டால் பெண்ணினம் ஆண்களை விடப் பின்தங்கிய நிலையிலுள்ளது'', என்று குறிப்பிட்டுள்ளார்.

நோர்வே நாட்டின் பிரதம மந்திரி திருமதி புருட்லன்ட் கருத்துத் தெரிவிக்கையில், ''இந்நூலானது உலகளாவிய ரீதியில் பெண்களின் சமத்துவமின்மைக்கான பின்னணிக் காரணங்களை துல்லியமாகக் காட்டுகிறது'' என்று குறிப்பிட்டுள்ளார். இந்நூலின் சில முக்கிய அம்சங்கள் கீழே தரப்படுகின்றன.

1) கல்வியறிவின்மை

1970க்கும் 1985க்கும் இடையில் கல்வியறிவற்ற பெண்களின் எண்ணிக்கை 5கோடி 40 இலட்சமாக உயர்ந்துள்ளது. அதே நேரத்தில் ஆண்களின் எண்ணிக்கை 40 இலட்சமாக மட்டுமே உயர்ந்துள்ளது.

2) விவாகம்

தற்காலப் பெண்கள் குறைந்த காலத்தை தாம்பத்திய வாழ்வில் செலவிடுகின்றனர். காலம் பிந்தித் திருமணம் புரிகின்றனர். குறைந்த அளவில் பிள்ளைகளைப் பெறுகின்றனர். மணம் செய்து கொள்கின்றவர்களில் பெரும் தொகையினர் விவாகரத்துச் செய்கின்றனர். அல்லது பெண்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர். ஆபிரிக்க நாட்டில் 1/5 பங்கினரான பெண்கள் குடும்பப் பொறுப்புக்களை ஏற்று நடத்துகின்றனர் இதே போன்று முன்னேற்றமடைந்த நாடுகளிலும் லத்தீன் அமெரிக்கா, கரீபியன் தீவுகளிலும் பெண்களே குடும்பத் தலைவியர்களாகக் காணப்படுகின்றனர். பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் ஆண்கள் தலைமையிலான குடும்பங்களை விட வறுமையாகக் காணப்படுகின்றன.

3) பிள்ளைப்பேறு

உலகளாவியரீதியில் 20 வருடங்களுக்கு முன்பிருந்ததை விட குறைவான குழந்தைகளையே பெண்கள் பிரசவிக்கின்றனர். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் ஒரு பெண் 1.8% பேறடைகிறாள். உலகின் பெண்களில் 3/4 பங்கினர் வாழும் பின்தங்கிய நாடுகளில் 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 5-7 வரை காணப்பட்ட ஒரு பெண்

PLEASE DO NOT REMOVE
TAMIL CO-ORDINATING COMMITTEE
MELBOURNE AUSTRALIA

ணின் மகப் பேறானது 1990 களில் 8-6 ஆகக் குறைந்துள்ளது. ஆனால் மகப்பேறு காரணமாக நிகழ்ந்த பெண் மரணங்கள் அபிவிருத்தி அடைந்த நாடுகளை விட ஆபிரிக்கா, தெற்காசியா போன்ற பிரதேசங்களில் 50 மடங்கு கூடுதலாகக் காணப்படுகிறது.

#### 4) வேலையும் வேதனமும்

உலகெங்கும் பெண்கள், ஆண்களைப் போல் தொழில் புரிகின்றனர். ஆண்களை விடக்கூடுதலான நேரம் வேலை செய்கின்றனர். ஆசியா, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் வாரமொன்றில் ஆண்களை விட 13 மணித்தியாலம் வேலை செய்கின்றனர். ஆண்கள் செய்யும் அதே வேலையைப் பெண்கள் செய்தாலும் உலகம் எங்கும் ஆண்களை விட 30% - 40% வேதனம் குறைவாகவே பெறுகின்றனர். முந்திய ஆய்வுகள் எல்லாம் பெண்களின் வாழ்க்கை நிலை, பொருளீட்டலில் அவர்களின் பங்கு, குடும்பநிலை எல்லாவற்றையும் இருட்டடிப்புச் செய்து வந்தன. ஆண்களின் பங்களிப்புப் பற்றியே குறிப்பிட்டன. ஆயினும் இந்தப் புதிய ஆய்வறிக்கையின்படி பொருளாதார உற்பத்தியில் பெண்களின் பங்களிப்பு கணிசமானளவு உண்டு எனக் கூறப்பட்டிருக்கிறது. உத்தியோக பூர்வ கணிப்பீட்டின்படி 82 கோடி பெண்கள் அதாவது உலகப் பெண்களில் 41 விகிதத்தினர் (15 வயதுக்கு மேற்பட்டோர்) பொருளுற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் 10 – 20 வீதமான பெண்கள் பொருளாதார உற்பத்தியில் ஈடுபட்டபோதும் சரியான கணிப்பீடுகள் இல்லாமையால், இவர்கள் தொழில் செய்யும் பெண்கள் அணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. உலகின் பல பகுதிகளில் ஆண்களை விடப் பெண்கள் கூடுதல் நேரம் வேலை செய்கின்றனர் குறைவான வேதனத்தைப் பெறுகின்றனர். ஆண்களோ வெளியில் முழுநேர வேலை செய்து அதிக பலன்களைப் பெற வாய்ப்புடையவர்களாகக் காணப்படுகின்றனர். சைப்பிரஸ், யப்பான், கொரியக் குடியரசு போன்ற நாடுகளில் பெண்களின் வேதனம் மிகக் குறைவாகக் காணப்படுகிறது. இவை ஆண்களின் வேதனத்தின் அரைப்பங்காகும். மேற்கூறிய நாடுகளில் தரவுகளே கிடைக்கப் பெற்றன. கனடா நாட்டில் கூட வழிமுறையாக உயர் வேதனம் பெறும் ஆண்களின் தொழில்கள் பெண்களால் செய்யப்படுகின்றன. இவர்களிற்கு ஆண்களின் வேதனத்தின் 71%மே வழங்கப்படுகின்றது. மூன்றாம் உலகில் குறிப்பாக ஆசியா, ஆபிரிக்கா போன்ற பிராந்தியங்களில் அதிகமான பெண்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இவர்களின் பங்களிப்பு குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கையின் பிரகாரம் மேற்கூறிய காரணத்தால் உலகளாவிய ரீதியில் பெண் தலைவி கொண்ட குடும்பங்கள் பெருக வழிவகுத்தது. ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, கரிபியன் தீவுகள் போன்ற பிரதேசங்களில் ஒவ்வொரு 5 குடும்பங்களுக்கு 1 குடும்பம் பெண் தலைமையில் இயங்குகிறது. ஆசியாவில் மட்டும் இந்நிலை குறைந்து காணப்பட்டாலும் 14% என்பது கணிசமான உயர்வையே காட்டுகிறது. பட்டினங்களுக்குக் கணவன்மார் சென்றால் மனைவியர் கிராமங்களில் வசித்து குடும்பப் பொருளாதாரப் பொறுப்புகளை ஏற்கின்றனர். ஒரு சில பெண்களே கணவன்மாரிடமிருந்து பண உதவி பெறுகின்றனர், எஞ்சியோர் அல்லல்படுகின்றனர். லெசோத்தோ என்னும் நாட்டில் எடுத்த புள்ளி விபரங்களின்படி பட்டினங்களில் வேலை செய்யும் தங்கள் கணவர்களிடமிருந்து பணம் பெறாதவர்கள் 50% எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி பட்டின வாசியான கணவர்மார் தமது தந்தையர்க்கே பணம்

அனுப்பினர். இங்கும் பெண்ணினம் வலு விழந்தது.

கீழ் மட்டமான நடைமுறைக் கல்வியானது குடும்பத்திட்டம், பிள்ளைப் பராமரிப்பு, சுகாதாரம் போன்ற துறைகளில் கிராமியப் பெண்களுக்குப் போதிய வாய்ப்புகளை அளிக்கத் தவறிவிட்டது. அனேகமான வளர்முக நாடுகளில் குழந்தைப் பேறானது பெண்களைப் பெருமளவு சுகாதாரக் கேடுகளுக்காளாக்குகிறது. வளர்ச்சியடைந்த நாடுகளிலும் பார்க்க 80 - 600 தடவைகள் உயர்வான பேறுகால மரணங்கள் சம்பவிக்கின்றன. இளவயதுக் கல்யாணம் இப்படியான சம்பவங்களுக்குக் காரணமாயிருக்கலாம். 13-19வயதுக்கிடைப்பட்ட தாய்மார் தான் பேறுகால மரணத்துக்கும், சிசு மரணத்துக்கும் ஆளாக நேரிடுகிறது. "இப்படியான இளவயதுக் கல்யாணங்களும் பேறு காலங்களும் அப்பெண்ணில் கல்வியை அல்லது வேதனம் பெறக்கூடிய வேலை வாய்ப்பை அப்பெண்ணுக்கு மறுக்கிறது." என இவ்வறிக்கை கூறுகின்றது. வளர்ச்சியடைந்த நாடுகளில் பெண்களின் உடல்நலம் பொதுவாக நன்றாக இருக்கின்றது. பிள்ளைகள் பெறும் வீதம் குறைந்து காணப்படுகின்றது. கிழக்கு ஐரோப்பா, சோவியத் ஒன்றியம், வட ஐரோப்பா, வட அமெரிக்கா போன்ற பிரதேசங்களில் பொருளாதார நடவடிக்கைகளில் பெண்களின் பங்களிப்பு உயர்ந்து காணப்படுகின்றது. அவுஸ்திரேலியா, யப்பான், நியூசிலாந்து, தெற்கு, மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பெண்களின் பங்களிப்பு குறைந்தே காணப்படுகின்றது. பெல்ஜியம், செக்கோஸ்லோவாக்கியா, பிரான்ஸ், யப்பான், லக்சம்பேக், மோல்ரா, ஸ்பெயின், சோவியத் ஒன்றியம், யூகோஸ்லாவியா போன்ற நாடுகளில் 1987—1988 காலப்பகுதியில் பெண்கள் அமைச்சர் பதவிகளை வகிக்கவில்லை. புள்ளி விபரங்களின் படி உலக அரங்கில், மந்திரி சபைகளில் 3.5 வீதமானவர்களே பெண்கள். ஐக்கிய நாடுகளின் 159 உறுப்பு நாடுகளில் 6 நாடுகளில் மட்டுமே, 1990 இறுதி வரையிலான காலப்பகுதியில் (டொமினிக்கா, ஐஸ்லாந்து, அயர்லாந்து, நிக்கராகுவா, நோர்வே, பிலிப்பைன்ஸ்) பெண்கள் அரசியற் தலைமை வகித்தனர் என்று கூறுகிறது இந்த அறிக்கை.

பெண்களை இரண்டாந்தரப் பிரஜைகளாகவும் ஆண்களின் தேவைகளையும், விருப்பங்களையும் ஒருதலைப் பட்சமாக நிறைவேற்றுவதற்கென்றே படைக்கப்பட்ட உயிரினமாகப் பார்க்கும் சமூகத்தின் குரூரமனோபாவத்தை உடைத்தெறிந்து இந்தச் சமூகத்தில் ஆண்களைப் போன்று பெண்களும் சமபாத்திரத்தை வகித்து சம கௌரவத்தைப் பெற்று சமநீதியை அனுபவிக்க வேண்டுமென நாங்கள் விரும்புகின்றோம். இந்த நிலையில் பெண்கள் மீதான வன்முறைப் பிரயோகத்தை நாம் அனுமதிக்கவே முடியாது

நன்றி விடுதலைப் புலிகள் தை 1992



"மூன்று வருடக் கொன்ராக்ற் எழுதியே இயக்கத்திற்குப் போன நான்'' சிரிப்பு முகத்தில் படர, பகிடியாகக் கூறிய பதில்.

கப்டன் விஜித்தா




பலாலி வீதியில் இருந்து பிரிந்து திரும்பிய அந்த செம்மண் ஒழுங்கைக்குள் எமது சைக்கிள்களைத் திருப்பினோம். அது தான் செல்வபுரம் என்ற இடத்தின் ஆரம்பம். இருபக்கமும் பரந்து விரிந்த செம்மண் தறைகள்... ... ஆங்காங்கே அடர்த்தியாய் பனை மரங்கள்......... அங்கும் இங்குமாய் பல பச்சை மரங்கள், செடிகள், கொடிகள், மாலை நேரத்து செவ்வொளியில் மனதிற்கும், கண்ணிற்கும், இதம் தருவதாய் இவை அமைய அவற்றில் லயித்தபடி சைக்கிளை மிதிக்கின்றேன் நான்.

இயற்கையின் லயிப்பில் நேராகவே போக இருந்த என்னை, ' இதால திருப்புங்கோ '' என்ற விஜியின் குரல் சுண்டி இழுக்கிறது. அவள் காட்டிய ஒழுங்கைக்குள் திரும்பிய என்னை '' இதுதான் எங்கடவீடு நில்லுங்கோ...'' என நிறுத்துகிறாள். அவள் காட்டிய அந்த வீட்டைப்

பார்க்கின்றேன். பனை ஓலையால் மிக நேர்த்தியாக அடைக்கப்பட்ட வேலிக்குள் அழகான சிறிய வீடு.

முற்றத்தில் சைக்கிள்களை விட்டு விட்டு உள்ளே போகின்றோம். மலர்ந்த முகத்துடன் தாய் எங்களை வரவேற்கின்றாள்...... முகம் பிரகாசிக்க சிரித்துச் சிரித்துக் கதைத்தபடி தேனீர் தருகிறாள்......

நான் ஒருமுறை விஜியையும் தாயையும் மாறி மாறிப் பார்க்கின்றேன். எப்பொழுதும் மலர்ச்சியுடனும் சிரிப்புடனும் கதைக்கும் குணம் தாயிடமிருந்து தான் இவளுக்கு வந்திருக்கிறது என எண்ணிக் கொள்கிறேன்.

இருவரும் விடை பெற்று எழுகின்றோம். தாய் தனது சிரிப்பு மாறாமலே மெல்லக் கேட்கிறாள், " நீ ஒருத்தி தான் நல்லாய் படிக்கிறாய், உழைச்சுத் தரப் போறாய்...... எண்டு நான் பார்த்துக் கொண்டிருக்க... சுதந்திரப் பறவை புத்தகம் விக்க...... சுகாதார நிலையத்தில வேலை செய்ய எண்டு போனாய்... அங்க சோல்ற் கூட்டம், இஞ்சை கருத்தரங்கு எண்டு ஓடி ஓடிப் போனாய்...... கடைசியில 87 யூனில ஒரேயடியாய் வெளிக்கிட்டுப் போட்டாய். 3 வருசமாய் போச்சுத்தானே...... இனி எண்டாலும் வீட்டவாவன் ராசாத்தி......! வீட்டை இருந்து முந்தி மாதிரி வேலை செய்யன்...

தாயின் இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் விஜி கோபமடைந்து ஏசப் போகிறாள், என எண்ணி சைக்கிள் ஸ்ராண்டைத் தட்டியபடி விஜியை நிமிர்ந்து பார்க்கிறேன்.

நிதர்னமாக தானும் சைக்கிளை எடுத்தவன் " ஏனம்மா மூன்றுவருடக் கொன்ராக்ற் எழுதியே இயக்கத்திற்குப் போன நான்" சிரிப்பு முகத்தில் படர பகிடியாக அவள் கூறிய பதில், அந்தப் பதிலில் தொனித்த அவளின் உறுதி, ஆழமாக என் நெஞ்சைத் தொட்டது.

விஜி பயிற்சிக்குப், பின்னர் 1987 இல் இந்திய — புலிகள் போர் இடம் பெற்ற வேளையில் லெப் - துர்க்காவின் குழுவில் நின்று போர் புரிந்தாள்.

கோப்பாயில், செல்வபுரத்தில், கொக்குவிலில், கோண்டாவிலில், மானிப்பாயில்...... என இப்படியே எத்தனையோ இடங்களில் லெப். துர்க்காவின் குழுவில் நின்று இவள் போரிட்டாள்.

முகாம் திரும்பும் வழியில் செல்வபுரத்தில் தங்களது குழு நின்று போர்புரிந்த இடங்களைக் காட்டினாள். அதில் ஒரு இடத்தை விஷேடமாகச் சுட்டிக்காட்டி தனது M 16 அந்த இடத்துப் போரிலே 'ஸ்ரக்' ஆகி தான் பிடிபட இருந்ததையும் பின்னர் தந்திரமாகத் தப்பியதையும் கதை கதையாகக் கூறினாள். அன்று தம்முடன் குழுவில் நின்று போரிட்ட துர்க்கா அக்கா, சகிலா, சபரி, நிதி ஆகியோர் இன்று எம்முடன் இல்லையே என வேதனைப் பட்டாள்.

ஒரு முறை வல்லரசின் படைகளுக்கு எதிராக காட்டில் இடம் பெற்ற மோதல் ஒன்றில் திசை மாறிப் போன எமது குழு ஒன்று 5 நாட்கள் உணவின்றி நீரின்றி அலைந்து திரிந்து பழையபடி தனது சகாக்களுடன் இணைந்து கொண்டது. அவர்களில் இவளும் ஒருத்தி.

காட்டில் எமக்கு வேண்டிய உணவுப் பொருட்களை தூர இடங்களிலிருந்து சுமந்து வரவேண்டிய நிலை இருந்தது. அலுக்காமல் சலிக்காமல் மூட்டைகளை இவள் சுமந்து வருவாள்.

யாராவது பேசினால், கடிந்து கொண்டால் சினந்தால் முகம் கோணாமல் மெல்ல அதைச் சமாளிப்பாள்.

எல்லோருமே விஜியைப்போல பொறுமையாக, சிரிப்பு மாறாமல் இருக்கக் கூடாதா என்சில சமயம் நான் எண்ணுவதுண்டு.

அரசியல் வேலைக்கென விசேடமாகப் பயிற்றப்பட்ட இவள் 1990 இன் ஆரம்பப் பகுதியில தென்மராட்சிப் பிரிவில் கப்டன் அமுதினியுடன் அரசியல் வேலையில் ஈடுபட்டாள். 1990 இன் பிற்பகுதியில் வலிகாமப் பிரிவில உரும்பிராய் பிரதேசத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டாள்.

எந்த வேலையையும், பிரச்சினைகளையும் நிதானமாக அணுகி பொறுமையாகச் செய்து முடிப்பது அவள் வழக்கம்.

கோட்டையில் புலிகளுக்கும் சிறீலங்காப் படைகளுக்கும் இடையே உக்கிரமான சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்த போது எமது வீராங்கனைகளின் பசி தீர்க்க அவ்வளவு குண்டு வீச்சுக்களுக்கும் ஷெல் அடிகளுக்கும் மத்தியில் உலர் உணவுப் பெட்டியைச் சைக்கிளில் கட்டியபடி வெறிச்சோடிய இடிபாடுகள் நிறைந்த யாழ் நகர வீதியூடாக எத்தனையோ முறை கோட்டையை நோக்கிப் போயிருக்கிறாள். ஆனையிறவிலே பதுங்கு குழி அமைக்கப் பெண்களை அழைத்துச் சென்றிருக்கிறாள், தானும் நின்று. பதுங்குகுழிகளை வெட்டியிருக்கிறாள்.

இவளது கொப்பிகளில், குறிப்புக் கொப்பிகளில். பைல்களில் எல்லாம் தலைவன் அண்ணாவின் படம் ஒட்டப்பட்டு "பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும் நற்றவ வானில் நனி சிறந்தவே." என்ற வாசகம் எழுதப்பட்டிருக்கும்.

1991-07-19 அன்று ஆனையிறவு தடை முகாம் தகர்ப்புக்காக கட்டைக் காட்டில் இடம் பெற்ற மோதலில் - வரலாற்றுப் புகழ் மிக்க சமரில் - தான் பிறந்த பொன்நாட்டிற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டாள் விஜி.

பலாலி வீதியிலிருந்து பிரிந்து திரும்பிய அந்தச் செம்மண் ஒழுங்கைக்குள் எமது சைக்கிளைத் திருப்புகின்றோம். அதே இயற்கைக் காட்சி ....... அதே சம்பியம்........ ஒரே ஒரு வேறுபாடு அன்று என்னுடன் சைக்கிளில் வந்த விஜி... இன்று என்னுடன் வரவில்லை.

விஜியை நினைத்து சோகத்தின் சாயல் படிந்த எனது முகத்தைப் பார்த்த சக போராளி கூறுகிறாள் ''விஜியக்காவின் நினைவு எங்கள் ஒவ்வொருவரின் இதயங்களிலும் இருக்கும் வரைக்கும், அவவின்ரை தளராத இலட்சியமும் வேட்கையும் எங்களின் இதயங்களில் இருந்து கொண்டே இருக்கும்.''

என் நினைவுகளில் வியாபித்து நின்ற விஜி ''இதால திரும்புங்கோ'' என இப்போதும் வழி காட்டுகிறாள்.

விஜியின் தாய் சோகம் கப்பிய முகத்துடன் எங்களை வரவேற்கிறார். எனது தலையிலிருந்து கால்வரை தனது கைகளால் தடவி எனது கை விரல்களை ஒவ்வொன்றாய் நீவி என் தோள்களில் முகம் புதைத்து, என்னில் தன் மகளைத் தேடி. " என்ரை ராசாத்தி எங்கை.? என்ரை ராசாத்தி எங்கை...?." எனத் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

கதறிய அந்தத் தாயின் முகத்தை மெல்ல நிமிர்த்தி, கண்களைத் துடைத்து,.... " உங்கடை ராசாத்தி இஞ்சை......" என எனது இதயத்தைத் தொட்டுக் காட்டுகிறேன்.

சித்ரா

# கைம்மைக் கொடுமை

கணவனை இழந்த பெண் சடப்பொருளாக, நடைப்பிணமாக மட்டும்தான் வாழலாம் என்ற கட்டாயத்தைப் பெண்கள் மேல் செலுத்துவதில் மகிழ்ச்சி காணும் எமது சமூகத்தின் அடக்கு முறைத் தத்துவங்களுக்கு மதத்தலைவர்கள், அகிம்சை வாதிகள் போன்றோர் பெண்களை எந்நிலையில் வைத்திருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்பது பற்றியும் இக் கட்டுரை விளக்கி நிற்கிறது. அடுத்த கட்டுரையில் தமிழீழத்தில் கைம்மை எவ்வாறு பேணப்படுகிறது என்பது பற்றியும் கைம் பெண்கள் நிலை எப்படியுள்ளது என்பது பற்றியும் ஆராய்வோம்.

சமுதாயத்தில் அரைப்பங்கினரான பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் ஒடுக்கு முறைகளில் மிகவும் கொடுமையானது கைம்மைக் கொடுமையாகும்.

மனைவியை இழந்து விட்ட ஆண் சில மாதங்களுள் மறுமணம் புரிந்து கொள்கிறான். அதற்கு எதுவித தடையுமில்லை. ஆனால் கணவனை இழந்த பெண்ணோ மறுமண உரிமை மறுக்கப்பட்டு கைம் பெண், விதவை, அறுத(ா)லி, அமங்கலி எனப் பட்டஞ் சூட்டப்பட்டு வீட்டிலும் வெளியிலும் நடைபெறும் மத வழி பாடுகள், சடங்குகள், விழாக்களில் கலந்து கொள்ள அவளுக்குத் தடை விதிக்கப்படுகின்றது. அவளிடமிருந்து பூச்சூடும், பொட்டிடும் உரிமை பறிக்கப்படுகின்றது வெள்ளை ஆடை உடுக்க வைக்கப்பட்டு சமூகச் சிறப்பு நிகழ்வுகளினின்றும் அவள் விலக்கி வைக்கப்படுகின்றாள். நடைப் பிணம் போன்றே அவளது வாழ்க்கை தொடர்கிறது.

## இந்து மதமும் கைம்மையும்

ஆரியப் பண்பாடும் இந்து மதக் கோட்பாடுகளும்தான் கைம்மைக் கொடுமைக்கு ஆணிவேராக அமைந்திருக்கின்றன. கணவனை இழந்த கைம் பெண் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள் என இந்து மத வேதமான மனுதர்ம சாத்திரம் கீழ்க் கண்டவாறு கூறுகிறது,

" கணவனை இழந்தால் காய், கனி, கிழங்காகிய புல்லுணவை உண்டு காலங் கழிக்க வேண்டும். மற்றொருவன் பெயரை நாவாலும் சொல்லக் கூடாது.

கணவன் இறந்த பின் அவனுக்குரிய திதி, சிரார்த்தம் இயற்றி வருக.

தூய்மை, பொறுமை, பிறனை விழையாமை, மது, புலால் உண்ணாமை, இவை கைம் பெண்ணுக்கு இலக்கணம்.

கைம்மையிலும் பிரம்மச்சாரியம் தவறாத கற்பினள். பிரம்மச்சாரிகளைப் போன்றே வீடடைவாள். பிள்ளை இல்லாவிடினும் கூட அவளுக்கு மோட்சம் உண்டு. வாலகில்யா, சநகர் இவ்வாறு மோட்சம் பெற்றனர்.

மறுமணம் செய்து கொள்ளாதவளே கற்புடையவள். விதவாவிவாகம் ஒரு திருமணமாகக் குறிக்கப்படவில்லை''.

இவ்வாறு கூறி பெண்களுக்கு மறுமணத்தை மறுத்து அவர்களைக் கைம்மை பேணும்படி பணிக்கும் இந்து மத வேதமான மனுதர்மம்,

'' கணவனுக்கு முன்னதாக மனைவி இறந்தால் அவளுக்குரிய தென்புலக் கடமையைச் செய்து முடித்த பின் மற்றொரு பெண்ணை மணக்கலாம், ''

என்றும்,

''மூத்த மனைவி பிணக்குற்றுப் பிரிந்தால் தடுத்துக் காத்துக் கொள்க. அல்லது, அவளின் பெற்றோரிடம் சேர்க்க.''

கணவனைப் பகைத்து மனைவி விலகியிருந்தால் ஓராண்டு பொறுத்து அவளுக்குக் கொடுத்த ஆடை, அணிமணி என்பவற்றை திரும்பப் பெறுக, பேச்சும் உறவும் கொள்ளற்க.

பொல்லாங்கு சொல்பவளை உடனே நீக்குக. மலடியை எட்டாண்டு கழித்தும். அடிக்கடி பிள்ளைபெறுபவளைப் பத்தாண்டு கழித்தும், பெண் குழந்தைகள் மட்டுமே பெறுகிறவளை பதினொரு ஆண்டு கழித்தும் விலக்குக, வேறு மணம் புரிக. அவர்களுக்குப் பொருள் யாதும் தர வேண்டியதில்லை ''

என்றும் கூறுகிறது. குழந்தை பெற முடியாத பெண்ணானால் எட்டாண்டுகளின் பின்னரும், ஆண்குழந்தையைப் பெறாது, பெண் குழந்தைகளையே தொடர்ந்து பெற்றுக் கொண்டிருக்கும் பெண்ணானால் பதினொரு ஆண்டுகளின் பின்னரும் கூட அவளை விலக்கி விட்டு மறுமணம் புரியலாம் என்று ஆண்களுக்கு மறுமண உரிமை வழங்கும் மனுதர்மம் பிள்ளை பெறும் ஆற்றலற்று இருக்கும் ஆண்களை விலக்கி வைத்து விட்டு மறுமணம் செய்யும் உரிமையைப் பெண்களுக்கு வழங்கவில்லை, பிள்ளை பெற முடியாத பெண்ணானவள் கணவனதோ, மாமனாரதோ அனுமதி பெற்று மைத்துனர் அல்லது கணவனின் ஏழு தலைமுறைக்குட்பட்ட பங்காளியுடன் கூடி வம்ச விருத்திக்காகப் பிள்ளைகள் பெற்றுக் கொள்ளலாம் என்று புதுவழி கூறுகிறது. இப்போது இதை யாரும் பின்பற்றுவதில்லை. ஆயினும் இந்து மதம் பெண்களை இழிவுபடுத்தியும் ஆண்களுக்கு விதி விலக்களித்தும் வருவதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும்.

இது தவிர கணவன் இறந்தால் மனைவி அவனது உடலுக்கு மூட்டும் தீயுட் புகுந்து தன்னை அழித்துக் கொள்ள வேண்டும் என்றும் அதுவே நற்பேறு, நற்செயல், போற்றப்படுகின்ற செயல் என்றும் இந்து மதக் கோட்பாடுகள் கூறுகின்றன. இச் செயலை மனைவி விரும்பாவிட்டால் அவளை வலிந்து தீயுட் தள்ளிக் கொல்லும் கொடிய வழக்கம் இந்தியாவின் பல பாகங்களில் இருந்து வந்துள்ளது. இந்து மத பீடாதிபதிகளில் ஒருவரான பூரி சங்கராச்சாரியார் இதை வலியுறுத்திக் கூறி இந்தியப் பெண்கள் அமைப்புகளின் கடும் கண்டனத்துக்குள்ளானார். ஆனால் இந்தியாவில் இன்னும் சில இடங்களில் இந்தக் கொடுமை நிகழ்ந்து கொண்டுதானிருக்கிறது.

## இந்தியாவில் கைம்மை

இந்தியாவில் பார்ப்பனர் குடும்பங்க

னில் கைம்மைக் கொடுமை கொடூரமாகத் தலை விரித்தாடுகிறது. கணவனை இழந்த பெண் தலையை மொட்டையடித்து துவராடை (காவியுடை) உடுத்து வீட்டுப் பணிகளில் மட்டுமே ஈடுபட்டு, காய், கனி கீரை, கிழங்கு போன்றவற்றை உணவாகக் கொண்டு எஞ்சிய காலத்தைக் கழிக்க வேண்டும். மறுமணம் என்ற பேச்சுக்கே அவர்களுக்கு இடமில்லை. குடும்ப நிகழ்ச்சிகள். விழாக்கள், வழிபாடுகள் இவை எவற்றிலும் கலந்து கொள்ளும் உரிமை அந்தப் பெண்ணுக்கு முற்றாக மறுக்கப்படுகின்றது. இறந்த கணவனின் உடலுடன் உடன் கட்டையேற்றப்படுவதை விட கைம்மையானது கொடுமையாக இருக்கிறது.

மொட்டை அடித்து துவராடை உடுத்துவிக்கும் அளவுக்கு கைம்மைக் கொடுமை இங்கு இல்லையேயாயினும் மறுமணம் செய்யும் உரிமை கணவனை இழந்த பெண்ணுக்கு இங்கும் மறுக்கப்படுகின்றது. பூச் சூடும், பொட்டிடும் உரிமை மறுக்கப்படுகின்றது. குடும்ப விழாக்கள், சிறப்பு நிகழ்ச்சிகளில் அவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். மனைவியை இழந்த ஆணுக்கு மறுமணம்செய்து வைக்கின்ற எமது சமுதாயம் கணவனை இழந்த பெண்ணை மட்டும் கைம்பெண்ணாக்கி விதவையாக்கி வீட்டுக்குள் முடக்கி வைக்கிறது.

எமது சமுதாயத்தில் குறிப்பாக இந்து மத சமுதாயத்தில் கைம்மைக் கொடுமை பெரியவர்கள் என மதிக்க படுவோராலும் கூட மரபுவழியாகப் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

நடமாடும் தெய்வம் என இந்து மதத்தோரால் போற்றி வணங்கப்படுகின்ற காஞ்சிப்பெரியவர் (சங்கராச்சாரியார்) அவர்கள்,

"திருமணமாகாத பிராமணப் பெண்களை வாழைமரத்துக்குத் திருமணம் செய்து வைத்துப்பின் அந்த வாழை மரத்தை வெட்டிப்போட்டு விட்டு பெண்களை வீட்டில் விதவைகளாக வைத்துக் கொண்டாலும் கொள்ளலாமே தவிர எக்காரணம் பற்றியும் பிராமணப் பெண்களை வேற்றுச் சாதிக்காரனுக்குத் திருமணம் செய்து வைக்கக் கூடாது"

என்று பகன்றார்கள்.

சாதியத்தைக் காப்பதற்காக அப்பாவிப் பெண்களைக் கைம்மைக் கொடுமைக்குள்ளாக்கத் துணியும் கொடிய எண்ணமும் நோக்கமும் சமூகத்தில் பெரியவர்கள் என்று மதிக்கப்படுபவர்களிடம் இருந்து வருகிறது.

## கைம்மை பற்றிக் காந்தியடிகள் கருத்து

மகாத்மா என்றும் கருணாமூர்த்தி என்றும் தேசபிதா என்றும் போற்றப்படுகின்ற காந்திப் பெரியவர்கூட "கைம்பெண்களைக் கட்டாயப்படுத்தி கைம்மைபேண வைப்பது தவறு" என்று கூறுகிறாரே தவிர பெண்கள் தாமாகவே கடைப்பிடித்த கைம்மையை அவர் ஆதரித்தார். அவர் கவலைப்பட்டதெல்லாம் கைம்மைக் கன்னியர்களுக்காகத்தான்.

"விதவை என்ற சொல் இந்து தர்மத்தில் புனிதமான தொடர்புடைய சொல். காலஞ்சென்ற திருமதி ரமாபாய் ரான்டேயைப் போன்ற உண்மையான விதவைகளுக்கு நான் வணக்கம் செலுத்துகிறேன். விதவையின் உட்பொருள் என்ன என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார்.

"நான் போர் தொடுப்பது உண்மைக் கைம்மை நிலையைப் பின்பற்றுவோர் மீதன்று"

(14 பக்கம் பார்க்க)



# களத்திலிருந்து ஒரு கடிதம்

தமிழீழம்.
13-01-1992

அன்புள்ள அக்காவிற்கு,

நான் நலமாக உள்ளேன். உனதும் பிள்ளைகளதும் சுகம் அறிந்தேன்.

மேலும், மிக விரைவில் இங்கு மிகப் பெரிய யுத்தம் ஒன்று வரப்போவதை நீ அறிந்திருப்பாய்.

ஒரு புறம் பேச்சுவார்த்தை என்று முயற்சிகள் நடைபெற்றாலும் சிறீலங்கா அரசாங்கமும், எதிர்க்கட்சிகளும், பௌத்தசங்கங்களும் கூடினவாதமே பேசுகின்றன: இராணுவத் தீர்வையே விரும்புகின்றன.

குடாநாட்டை சுற்றிவர மேலதிக படைகளும் போர்த்தளபாடங்களும் குவிக்கப்பட்டு குடாநாட்டின் மீதான முற்றுகை மேலும் இறுக்கமாக்கப்பட்டு வருகின்றது. எந்த நேரமும் எதிரி குடாநாட்டிற்குள் வரகாத்துக் கொண்டிருக்கிறான். ஆகவே பாரியதொரு யுத்தத்தை நாங்கள் எதிர் கொண்டு நிற்கின்றோம்.

ஆகவே நீ இப்போது செய்ய வேண்டியது இந்த யுத்தத்திற்கு முகம் கொடுக்கின்ற வகையில் உன்னையும் உன்னைச் சுற்றி உள்ளவர்களையும் தயார் செய்வதுதான்,

வரப்போகின்ற இந்த யுத்தமானது இவ்வளவு காலமும் நடந்தது போன்ற யுத்தமல்ல. ஆனையிறவையும், மணலாற்றையும் விட இது வித்தியாசமானது. அதிக அனர்த்தங்களை விளைவிக்கவல்லது. ஏனெனில் இராணுவத்தின் இலக்கு மக்கள் செறிந்து வாழ்கின்ற பிரதேசம். எதிரியின் எண்ணங்களையும் இராணுவ பலத்தில் உள்ள நம்பிக்கையையும் சிதறடித்து வெற்றியை எமக்குரியதாக்குவது மக்களின் முற்று முழுதான பங்களிப்பிலேயே உள்ளது. விழுகின்ற ஒவ்வொரு போராளியின் இடத்தையும் ஈடுசெய்ய மக்கள் முன்வருவார்களெனின், போராளிகளுக்கு உடனுக்குடன் தேவைப்படும் உதவிகளை பக்கத்தில் நின்று செய்வார்களெனின் 'அழித்து விடலாம்' என்று கனவுகண்டு கொண்டு வருகின்ற எதிரி மூக்குடைபட்டு திரும்புவது திண்ணம்.

நீ முதலில் செய்து கொள்ள வேண்டியது எதிரியின் கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு சிறந்த

அகழிகளை விரைவில் அமைப்பதுதான். இவை பாரிய அளவிலான உயிர்ச்
சேதத்தையும் காயமடையும் நிலையையும் மட்டுப்படுத்தும்.

மிக முக்கியமானது, சண்டை நடைபெறும் நேரத்தில் வதந்திகள்
பரவாத வண்ணம் பார்த்துக் கொள்வது. சண்டை தொடங்கியதுமே
'ஆமி அங்க வந்திட்டுதாம்' 'இங்க வருமாம்' என்ற ஆதாரமற்ற
கதைகளைக் கேட்டு மற்றவருக்கும் சொல்லி குழப்புவதை நிறுத்திக்
கொண்டாலே போராளிகளுக்கு பெருமளவில் கஸ்டங்கள் குறையும். ஏனெ
னில், வதந்திகள் மக்களை, அவர்களது மன உறுதியை குலைக்க வல்
லது. மன உறுதி குறைவுமாயிருந்தால் மக்கள் சிதறி ஓட வெளிக்கிட்டு
பாரிய உயிரிழப்புகளை சந்திக்க நேரிடும். எதிரியும் இதைத்தான் எதிர்
பார்ப்பான். ஆகவே திட்டமிட்டு வதந்திகள் பரப்பப்படும். இதைத் தடுப்
பது உன்போன்றவர்களின் முக்கிய கடமையாகும்.

இவற்றைவிட களத்தில் காயமடையும் போராளிகளை பராமரிப்
பதும் அவர்களது தேவைகளை பக்கத்தில் நின்று கவனிப்பதும் இன்றி
யமையாததாகும். அவர்களை பராமரிப்பதற்கு இப்போதிருந்தே உன்னை
தயார்படுத்திக் கொள். அத்தோடு உன்னைச் சுற்றி இருக்கும் அனைத்
துப் பெண்களையும் இப் பணிகளில் இணைந்து செயற்படவைக்கும் வகை
யில் நிலைமையை தெளிவாக்கு. அவர்கள் கடமைகளை உணர்ந்து கொள்
வார்கள் இணைந்து நிற்பார்கள்.

போராளிகளுக்கு தேவையான உணவு விநியோகங்கள் எல்லாம்
உடனுக்குடன் நடைபெறுவதும் உன்போன்றவர்களின் துரித செயற்பாட்
டில் தான் தங்கி உள்ளது.

இந்த யுத்தத்தின் வெற்றியில் தான் எமது போராட்டத்தில்
அடுத்த கட்ட நகர்வின் வேகம் தங்கி இருக்கின்றது. எல்லோரும்
இணைந்து நின்று போராடுவோமாயின் நிச்சயமாக எதிரி பெருத்த இழப்பை
சந்திப்பான். இது எமது இலக்கை நோக்கி மிக விரைவில் நாங்கள் முன்
னேறவழி செய்யும். எம் அனைவரின் வாழ்க்கையையும் உனது பிள்ளை
களின் வருங்காலத்தையும் நிர்ணயிக்கப்போகும் இந்த யுத்தத்திற்கு நாங்
கள் அனைவரும் தயாராக வேண்டும். எமது ஒருமித்த செயற்பாடுகள்
மூலம் எதிரிக்கு தக்கபதிலடி கொடுப்போம், வெற்றி பெறுவோம்.

வேறு என்ன? இத்துடன் முடிக்கிறேன்.

இப்படிக்கு,

அன்புத் தங்கை

வேணி

(11-ம் பக்கத்தொடர்ச்சி)

"இந்து மதத்தில் உண்மையான கைம்மை பெரிதும் பாராட்டப் பெற்றிருக்கிறது. இது நியாயமே"

இவ்வாறு கைம்மையின் பெருமைகளைப் பற்றிப் பேசிய காந்திப் பெரியவர் கூட்டங்களில் கைம்மை பற்றிப் பேசும் போது,

"தமது அடிப்படைத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத படி ஒரு விதவையையேனும் நாம் பலவந்தப் படுத்தி வைத்திருக்கின்றவரையில் நம்மை நாமே ஆண்டு கொள்ள எமக்குத் தகுதி உண்டா?"

என்று கைம்மையைப் பலவந்தப்படுத்திப் பேண வைப்பதைக் கண்டித்தாரே தவிர கைம்மைத் தன்மை கொடுமையானது எனக் கண்டிக்கவில்லை. அவர் கண்டித்ததெல்லாம் பருவ வயதுக்கு முன்பே சிறுவயதில் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட (பாலுறவு பற்றி உணர முடியாத வயதில் விதவைகளாக்கப்பட்ட கன்னிப் பெண்கள்) பற்றித்தான்.

விதவையான கன்னிப் பெண்களைத் திருமணம் புரியுங்கள் என்றுவேண்டுகோள் விடுத்த அளவுக்கு, திருமணமாகி கணவனுடன் வாழ்ந்து விதவையாக்கப்பட்ட பெண்களைத் திருமணம் செய்யுங்கள் என்று இளைஞர்களைக் காந்தியார் வலியுறுத்தவில்லை. "பெண்கள் தாங்களாகவே ஏற்று ஒழுகும் கைம்மை போற்றுதற்குரியது" என்றே அவர் கூறிவந்தார்.

'சாதியத்தின் அடக்குமுறைக்குள்ளாகுபவர்கள் தமது நிலையை உணர்ந்து கொள்ளாது, சாதியத்தை ஏற்று ஒழுகும் நிலையைப் போலத்தான் பெண்கள் தாமாகவே கைம்மை பேணுவது என்பதும். இது தவிர,

"ஆண்கள் புனர் விவாகம் செய்வதில்லை என்றும் விரதம் பூணுதலே விதவைகள் தொகையைக் குறைக்க உதவும் அருமருந்தாகும்," என்றும் காந்தியார் தனது கருத்தைத் தெரியப்படுத்தினார். எதிரிக்கு இரண்டு கண்ணும் போவதற்காக தனது ஒரு கண்ணை இழக்க முடிவெடுத்தவன் நிலைபோன்று இருக்கிறது காந்தியடிகளாரின் கருத்து. காந்தியடிகளாரின் கருத்தை கைம்மை பற்றி அவர் கொண்டிருந்த நிலையை சுப்பிரமணிய பாரதியார் பெண்கள் தொடர்பான தனது கட்டுரைகளில் கடுமையாகச் சாடி எழுதியிருக்கிறார்.

இந்தியாவில் கைம்மைக் கொடுமையை எதிர்த்து பலர் போராடியிருக்கின்றனர். வங்காளத்தைச் சேர்ந்த ஈஸ்வர சந்திர வித்தியாசாகர் என்னும் பெரியவர் கைம்மைக் கெதிராகவும் பெண் கல்வி மறுப்பை எதிர்த்தும் பெரும் போராட்டங்களை நடத்தினார். வங்காளத்தில் பல மாவட்டங்களில் பெண்களுக்கான கல்விக் கூடங்களை அமைத்து பெண்களுக்குக் கல்வியறிவூட்டிய ஈஸ்வர சந்திர வித்தியாசாகர் விதவைகளாக்கப்பட்ட பல பெண்களுக்கு திருமணத்தைத் தானே நின்று நடத்தினார். தனது மகனுக்கும் அவர் ஒரு விதவையை மணம்முடித்துக் கொடுத்தார், 19ஆம் நூற்றாண்டிலேயே மக்களின் கடும் எதிர்ப்புகளுக்கிடையே துணிவுடனும் உண்மையாகவும் பெண்களுக்காகப் போராடிய பெரியார் அவர். அவரைத் தொடர்ந்து தமிழகத்தில் தந்தை பெரியார் அவர்களும் பெண் விடுதலைக்கான தெளிவான கொள்கைகளை முன்வைத்துப் போராடுகிறார். பெண் விடுதலை குறித்து தந்தை பெரியார் கொண்டிருந்த கருத்துக்களையும் அவர் செய்த பணிகள், செயற்பாடுகள் பற்றியும் பின்னர் விரிவாக நோக்குவோம்.

## பெண்களின் திருமண வயது

கைம்மைக் கொடுமை உட்பட அனைத்துப் பெண்ணொடுக்கு முறைகளையும் எமது சமுதாயத்திலிருந்து களைந்தெறிய

வேண்டுமானால் ஆண்களும் பெண்களும் அக்கொடுமைகள் பற்றியும் கொடுமைக ளால் சமுதாயத்துக்கு ஏற்படும் தீங்குகள் பற்றியும் முதலில் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

சமுதாயத்தில் ஆண்களும் பெண்களும் ஏறத்தாழ சமமாகவே இருக்கின்றனர். அவர்களின் சராசரி வாழுங்காலமும் சம மாகவே இருக்கின்றது. எனவே திரு மணமாகியபின் கணவன்மாரை இழக்கும் பெண்களும் மனைவிமாரை இழக்கும் ஆண் களும் கூட சமமாகவே இருக்கின்றார்கள். அவர்களுக்கிடையில் ஏன் வேறுபாடு எழ வேண்டும்.

அதில் பெண்களை இழக்கும் ஆண்கள் மறுமணம் செய்து பிறிதொரு வாழ்க் கையை அமைத்துக் கொள்ள முடிகிறது சமூகத்திலும் அவனது நன்மதிப்புக் கெடு வதில்லை. அதே நேரம் கணவன்மாரை இழந்த பெண்கள் மட்டும் அத்துடன் வாழ் விழந்தவள் ஆகின்றாள். சமுதாயத்தில் வேண்டத் தகாதவளாக அமங்கலியாக சாகும்வரை ஏதோ காலத்தைக் கடத்தும் சுமையாக ஆக்கப்படுகிறாள்.

- தொடரும் -

## மேஜர் சோதியா நினைவாக



பிறப்பு : 26-09-1963

வீரச்சாவு : 11-01-1990

# மேஜர் சோதியா

*(வசந்தி மைக்கல்)*

'பெண்மை பேதமையுடையது' என்ற பழமைக் கருத்தை நிதா னமாய் உடைத்து நிமிர்ந்து நிற்கும் விடுதலைப் புலிகள் மகளிர் படைப் பிரிவின் முதலாவது படைத்தளபதி மேஜர் சோதியா.

அன்புச் சிறகால் எம்மை அரவணைத்து எமது கடமைகளைப் போதித்தவள். உழைத்து உழைத்தே தன்னை உருக்கிக் கொண்டு இன்று எல்லோர் உள்ளங்களிலும் உயர்ந்து நிற்கின்றாள்.

# வெற்றுக்கவிதை அல்ல — உன் மகள்

அம்மா,
ஓர் ஆடி மாதப் பிற்பகல்... ..
நீயும் நானும்
எம் வயிற்றைக் காயவிட்டு,
வேலிக் கருவைச் செடிகளை வெட்டி இழுத்தது,
இன்னும் எனக்கு மறக்கவில்லை.
அந்தப் பட்டினிப் பல்கலைக் கழகத்தில்
என்னை நீ
பயிற்றுவித்தது ஏராளம்.

நான் படித்ததெல்லாம்
பெரீய்......ய பெரீ......ய... , தடித்த,
நீண்ட புத்தகங்கள்.
இருந்தும்,
உலக நியதி புரியாமல்,
குழம்பிப்போய் நின்றேன்.
நீ மட்டும்
எப்படியம்மா,
எதிர்காலத்தைத் தீர்க்கமாக
எனக்குக் கூறினாய் ?

எனக்கு
சிந்தனை மண்வெட்டியும்,
சுதந்திரக் கடற்பாரையும் தந்து,
என்னை
வழியனுப்பியதே நீ தானே ?
பின் ஏனம்மா
இப்போது உன்முகத்தில்
கவலைக் கோடுகள் ?
பிரிவு வேதனையா...... ?

என்னில் நீ வளர்த்து விட்ட

இலட்சியப் பற்று,
உன்னை விட்டு என்னை
பிரிப்பதாக எண்ணி விட்டாயா ?

இல்லையம்மா.
எனக்கு நீ கற்றுத் தந்த பாடங்களை
ஒரு முறை
மீண்டும் புரட்டிப் பார்.
இப்போது புரியும் உனக்கு.
உடலளவில் உன்னிலிருந்து நான்
வெகு தூரம் பிரிந்தாலும்,
உள்ளத்தால், கொள்கையால்,
கொண்ட இலட்சியத்தால்
இப்போதுதான் உன்னிடம் நான்
மிக.. ... மிக......
நெருங்கியிருக்கிறேன்
ஒன்றை மட்டும் நீ உணர்ந்து கொள்.
உன் மகள்
இலட்சியத்துக்காகப்
போராடத் துணிந்து விட்டாள்.

இத்தனையும் சொன்ன பின்பும்,
ஏனம்மா உன்முகத்தில்
இன்னமும் கவலைக் கோடுகள் ?
பிரிவு வேதனை போல்
தெரியவில்லையே.
ஓ..... !
இப்போதுதான் புரிகிறது
போராடப் போன மகள்,
போரை விட்டு, பேனை பிடித்து,
பா எழுதிப் பாடுவதுதான்,
உன் கவலைக்குக் காரணமோ...?
இன்றோடு விடு கவலைகளை.

உன் மகள்
வெற்றுக் கவிஞையல்ல,
வெட்டியாய் பாவெழுத.
கம்பனோ: காளிதாசனோ அல்ல,
காவியப் போர் தொடுக்க,
காலத்தின் தேவைக்காய்,
சிறு கவிதைக் குண்டுகளையே
வெடிக்கிறேன்.
அயர்ந்து தூங்கும் எம்மினம்
எழுவதற்காக.

# சமர்க்களத்தில்

இராணுவத்தினரின் இன ஒழிப்புநடவடிக்கைகளின் மத்தியிலும் போராளிக ளோடுபோராளியாக நின்ற ஒருவர்; பெண்கள் ஆயுதப் போராட்டத்தில் இணையுமுன்பே, தன்னைப் புலிகளோடு இணைத்த ஒருவர் அவர்தான், மக்களால், ''அம்மா'', என்றும் புலிகளால் ' அக்கா, டொக்டர் அன்ரி'' என்றும் அன்பாக அழைக்கப்படும் மருத்துவர் செல்வி சாந்தி.

இவர் 1984-இல் தனது மருத்துவப்படிப்பை முடித்துக் கொண்டு வெளியேறி, ஒன்றரை வருடங்கள் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் பணியாற்றினார். 1985-இன் இறுதியில் வல்வை அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக நியமனம் பெற் றார் இவரை நாம் சந்திக்கின்றோம்.

''எங்கள் மண்ணிலேயே வாழ நினைத்த மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே இந்த மண்ணில் வாழ விரும்பிய நீங்கள் எப்போது உங்களை எங்கள் இயக்கத்தோடு இணைத்துக் கொண்டீர்கள்?'' என்று நாம் கேட்டபோது,

''1984-ம் ஆண்டில்தான் முதன் முத லில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தொடர்பு ஏற்பட்டது. இராணுவக் கெடு பிடிகள் காரணமாக போராளிகளும் மக் களும் தகுந்த நேரத்தில் வைத்திய சிகிச்சை பெற முடியாதிருந்ததால், இதற்கு முதலு தவி பெருமளவில் உதவி செய்யும் என்ற எண்ணத்தில் முதலில் எம் மக்களுக்கும் போராளிகளுக்கும் முதலுதவி வகுப்புக் களை எடுத்தேன். அதன் பின்பு 1986-ம் ஆண்டு வல்வை அரசினர் வைத்திய சாலைக்கு வைத்தியப் பொறுப்பதிகாரியாக மாற்றம் பெற்று வந்ததும் எனக்குப் புலி களுடன் கூடுதலாக நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. வைத்தியசாலை யில் கடமை செய்து கொண்டு போராளி களுக்குச் சிகிச்சையும் செய்து கொண்டு, கிராமங்கள் தோறும் புலிகளால் அமைக் கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களுக் குப் போய் எம் மக்களுக்கு, குறிப்பாக குழந்தைகளுக்கும் கர்ப்பிணித் தாய்மாருக் கும் சிகிச்சை செய்தேன். அதன் பின் இந் தியப் படை இங்கு நின்ற பொழுதிலும், இப்போது இலங்கைப் படையுடனான மோதல்களின் போதும் தொடர்ந்து சிகிச்சை செய்து வருகிறேன்'', என்று அவர் கூறினார்.

மீண்டும் நாம், ''நீங்கள் ஒரு மருத்து வர். உங்கள் பணி வைத்தியசாலைகளிலும் மருத்துவ நிலையங்களிலுமே செய்யப்பட வேண்டியது. அப்படியிருக்கும்போது ஏன் நீங்கள் உயிர் போகுமளவுக்கு பலத்த அபா யங்கள் வரும் என்பதைத் தெரிந்துகொண் டும் களத்தில் உங்கள் பணியைத் தொடர நினைத்தீர்கள்?'' என்று கேட்டோம்.

அதற்கு அவர் சொன்னார், சாதாரண மாகவே சண்டையின்போது காயப்படும் போராளிகளை சற்றுப் பின்னேயுள்ள முத லுதவி முனைக்குக் கொண்டு வருவதிலேயே பல சிரமங்கள் உண்டு. அதிலும் தொட ரான ஷெல், பீரங்கித் தாக்குதல், விமா னக் குண்டு வீச்சு, அத்துடன் நேரடி யுத் தத்தின் ரவைகளினால் பாதிப்பு. இத்த னைக்கும் நடுவில் காயப்பட்ட போராளி களை மேலும் காயமடையா வகையில்

# பெண் வைத்தியர்

செல்வி:
சாந்தி



பாதுகாப்பாக முதலுதவி முனைக்கு கொண்டு வருவதற்கு சில சமயங்களில் பல மணித்தியாலங்கள் கூட எடுப்பதுண்டு. முதலுதவிச் சிகிச்சை வழங்கப்பட்ட பின்பு அங்கிருந்து வைத்தியசாலைக்குக் கொண்டு வரும் வழியில் வான் தாக்கு, பீரங்கித் தாக்கு போன்ற பலத்த சிரமங்கள் உண்டு. இதனால் காயப்பட்ட போராளிகளைத் துரிதமாக வைத்தியசாலைக்குக் கொண்டு வருவதில் தாமதம் ஏற்படுகிறது. ஆகவே பயிற்றப்பட்ட வைத்தியர்கள் முதலுதவி முனைகளிலேயே நின்று சிகிச்சை செய்தால், போராளிகளின் உயிரிழப்புகளைப் பெருமளவில் குறைக்கலாம் என்ற எண்ணத்தில்தான் என் சேவையை நான் களத்தில் நின்று செய்ய விரும்பினேன்''.

''அக்கா, நீங்கள் வைத்தியசாலைகளிலும் சிகிச்சை செய்திருக்கிறீர்கள். யுத்த முனையிலும் சிகிச்சை செய்திருக்கிறீர்கள். இரண்டு இடங்களிலும் சிகிச்சை செய்வதில் அடிப்படை வேறுபாடுகள் ஏதாவது உண்டா?''

''யுத்த முனையில் நின்று வைத்திய சேவை செய்வது என்பது வைத்தியசாலையில் செய்யும் சேவையை விட முற்றிலும் வேறுபட்டது. சண்டையின்போது ஷெல், பீரங்கித் தாக்குதல்கள், விமானக் குண்டு வீச்சுக்கள் என்பவற்றுக்கு மத்தியில் காயமடைந்த போராளிகளை மேலும் காயப்படாமல் விரைவாகப் பாதுகாப்பான இடத்துக்கு எடுத்துச் சென்றுவேகமாகவும், ஆனால் பதட்டமில்லாமலும், சில வேளை

களில் அடிப்படை வசதிகளே இல்லாத இடத்தில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டே சிகிச்சை செய்வோம். பல சந்தர்ப்பங்களில் பதுங்கு குழிகளினுள்ளே சிறு வெளிச்ச வசதிகூட இல்லாமல் எமது பணியில் ஈடுபட வேண்டியிருக்கும்''.

''நீங்கள் ஒரு மருத்துவராகையால் மரணம் என்பது உங்களுக்குப் பழக்கப்பட்டுப் போன ஒரு விஷயம் ஆனாலும் போராளிகளின் மரணங்கள் வித்தியாசமானவை. உங்கள் கண் முன்னேயே போராளிகள் மரணிக்கும் போது நீங்கள் எவ்வித உணர்வுக்கு ஆளாகுகின்றீர்கள்?''

ஒரு நிமிட நேரம் ஏதோ யோசித்தார். பின் மெதுவான குரலில். ''என் கண் முன்னே ஒவ்வொரு போராளியும் தம் உயிரைத் தியாகம் செய்யும் போதும் நெஞ்சில் ஏதோ... இனம் தெரியாத ஒரு பாரம்..., வேதனை..., நம் குடும்பத்தில் ஒரு அங்கத்தவரை இழந்தது போல் ஒரு பிரிவு தோன்றும். ஆனால் மறுகணமே எந்த இலட்சியத்துக்காக தமது இளவயதின் இனிமை நிறைந்த உல்லாச வாழ்க்கையைத் துறந்து, வாலிபக் கனவு மேகங்களை விலக்கி, தம் உயிரைத் தியாகம் செய்தார்கள் என்பதை நினைத்தவுடன், என் கண்ணில் நீர் வருவதில்லை. இதற்கு மாறாக என் பணியில் ஒரு புதிய உற்சாகம் பிறந்து, நான் என் கவலைகளை மறந்து, காயமுற்ற மற்றப் போராளிகளைக் காப்பாற்றும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு விடுவேன். விரைவாகச் செயற்பட்டு அனைத்துயிர்களையும் காப்பாற்றிய பின்பு ஏற்படும் மனநிறைவு, சந்தோஷம், திருப்தி போன்றவற்றை வார்த்தைகளால் சொல்லி விட முடியாது. அதை அனுபவித்துப் பார்த்தால்தான் புரியும்'' என்றார்.

''நீங்கள் பல களங்களுக்கும் போயிருப்பீர்கள் பல அனுபவங்களைப் பெற்றிருப்பீர்கள். அவற்றிலே குறிப்பிடத்தக்க அனுபவமொன்றைச் சொல்லமுடியுமா?'' என்று நாம் கேட்டபோது.

''ஆம் எல்லாராலும் பரபரப்பாக பேசப்பட்ட, ஆனையிறவுப் போரின் போது ஒருநாள்...,

பரந்தன் பக்கமாகப் போர் நடந்து கொண்டிருந்தது காயமடைந்த போராளிகள் எம்மிடம் அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த வேலை முடிந்ததும் வீரச்சாவை அணைத்த போராளிகளைக் கொண்டு வந்து கொண்டிருந்தார்கள். தலையில் காயத்துடன் ஒரு கையும் இரு கால்களும் துண்டிக்கப்பட்ட நிலையில் ஒரு பெண் போராளியை அவர் இறந்து விட்டார் என்று நினைத்து - வீரச்சாவடைந்தவர்களுடன் கொண்டு வந்திருந்தார்கள். அவரை தூக்கி இறக்கும் பொழுது அவர் மயக்கம் தெளிந்து. தன்னைத் தூக்கிக் கொண்டிருந்த ஆண் போராளியை ''அண்ணா'' என்று கூப்பிட்டார். அவர் முதலில் அதிர்ச்சியடைந்தாலும், உடனேயே என்னிடம் கொண்டு வந்து சேர்த்து விட்டார். நான் பெரும் மனப் போராட்டத்துக்குள்ளானேன். இந்தப் பெண் போராளியின் உயிரைக் காப்பாற்றினால், நாளை அவரது எதிர்காலம் 'எப்படி இருக்குமோ என்ற வேதனை. ஆனாலும் உயிர்களைக் காப்பாற்றுவது எனது கடமை என்பதால் நான் சிகிச்சை செய்யத் தொடங்கினேன். ஆனால் அவர் என் கைகளிலிருக்கும்போதே வீரச்சாவடைந்து விட்டார். தனது இறுதி மூச்சை விடும்போது அவர் என்னிடம், ''அன்ரி, என்ரை கால் ரெண்டையும் காணேல்லை. நான் சாகப் போறன். என்னைக் காப்பாற்ற வேண்டாம்'' என்று என்னிடம் சொன்னார் இந்தச் சம்பவத்தை என்னால் மட்டுமல்ல, என்னுடன் அப்போது சேவையிலிருந்த அனைவராலுமே இன்னமும் மறக்க முடியாமல் இருக்கிறது''.

(22-ம் பக்கம் பார்க்க)

# எத்துணை இடர்வரினும் ஒய்ந்திட மாட்டோம்

இரண்டாம் உலகப் போர் சோவியத் ஒன்றியத்தின் பெண்கள் வாழ்விலே இழைத்து விட்ட கொடுமைகளும் இழப்புக்களும் சொல்லத் தரமன்று. இளமையின் பொற்கனவுகள் ஒவ்வொரு ஆடவர், பெண்டிர், இதயங்களிலும் ஓர் இன்பத் துணையை வாழ்க்கைக்கு உரியதாகக் கட்டிவைக்கும் நிலையில், அந்தப் போரரக்கன், விளைவித்த அழிவுகள்...... அப்பப்பா!

ஆண்களும் பெண்களுமாக இளைஞர் போர்க்காலத்தில் நாட்டுப் பணி செய்ய அலுவலகங்களில் முன் வரிசையில் நின்றனர்.

போர்க்காலத்தில் பெண்கள் மேற்கொள்ளாத பணிகள் ஏதுமில்லை, உழுது பயிரிட்டனர். 'முன்னணி வீரருக்கு ரொட்டி'' என்று நாடு காக்கச் செல்லும் வீரருக்கு விதைத்த தானியங்களை வழங்கித் தாங்கள் காட்டுக் கிழங்கு மாவினால் தயாரிக்கப் பெற்ற அற்பக் கஞ்சியை அரை வயிற்றுக்கு அருந்தி உழைக்கவே உயிர் வாழ்ந்தனர். சாலைகள் போட்டனர், பாலங்கள் அமைத்தனர். உலைக் களங்களில் கருகினர். பகைவர் இடைவிடாது பொழிந்த குண்டுகளுக்கு கீழ் தொழிற்சாலைகளை இயக்கினர். பதுங்கு குழிகள் தோண்டுவதும் மரங்கள் வெட்டுவதும் ஆலைக் கடைசற் பொறியை இயக்குவதும், சுமைகள் ஏற்றி இறக்குவதுமாகப் பல பணிகளில் ஈடுபட்டனர்.

இன்ப இல்லம் அமைக்கும் கனவுகள் ஈடேறவில்லை. அழிவு விளைத்த போர் முடிந்தது. தாயாக, மனைவியாக, காதலியாக நின்று அளப்பரிய இழப்புகளைத் தாங்கிக் கொண்ட சோவியத் மகளிர் போர் முடிந்ததும் முதற்பணியாக, தத்தம் உறவினரைக் கண்டுகொள்ளும் நோக்கில் மட்டுமே முனைந்தனரா?

இல்லை தங்கள் துயரங்களைப் பின்னே தள்ளி விட்டு, மறு வாழ்வுக்கான முயற்சிகளில் முழுமனதுடன் ஈடுபட்டனர். போரினால் நாசமான நகரங்களின் தெருக்களை எல்லாம் சீராக்க அணி திரண்டனர். மகளிர் விளை நிலங்களில் பொதிந்திருக்கக் கூடிய சிறு உலோகத் துண்டுகளைக் கூட நாசம் விளைவிக்காமல் கோதி எடுத்து நிலத்தை விளைவுக்குகந்ததாகச் செய்தனர்.

''உயிரினுமினிய காதலரையும், துணைவரையும், மக்களையும், இழந்தாலும், நாங்கள் ஒய்ந்து விட மாட்டோம்! நாங்கள் இடிபாடுகளைக் களைந்து புதியன சமைப்போம்! விதை விதைப்போம்; மரம் நடுவோம்; இளம் பயிர்களைப் பேணுவோம்; ஆயிரமாயிரம் தொழில்கள் சிறக்க உழைப்போம்,, என்ற மனப்பாங்குடன் பெண்களின் பணி தொடர்ந்தன.

ராஜம் கிருஷ்ணனின்
'புதிய கீதம் இசைக்கின்றனர்'
என்ற நூலிலிருந்து.

( 20-ம் பக்கத் தொடர்ச்சி )

சில காலம் இலங்கை இராணுவமும், பின்னர் இந்திய இராணுவமும் திரிந்த காலத்தில். அவர்களால் உங்களுக்கு இடையூறு எதுவும் ஏற்படவில்லையா?'' என நாம் கேட்டோம்.

''வல்லை, அரசினர் வைத்தியசாலையில் நான் கடமையாற்றிக் கொண்டிருந்த நேரம்... 87-ம் ஆண்டு... யாரோ தேச விரோதிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டு, இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டேன். நான் அவர்களது முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நேரம், நான் நடத்திய உண்ணா விரதப் போராட்டத்தையும், வல்வெட்டித்துறை மக்களும் வைத்தியசாலை ஊழியர்களும் சேர்ந்து முகாமுக்கு வெளியில் நடத்திய மறியல் போராட்டத்தையும் எதிர்க்கமுடியாத ஏகாதிபத்திய இராணுவம் என்னை 5 நாட்களின் பின் விடுதலை செய்தது'', என்று ஒரு சிரிப்புடன் சொன்னார்.

ஆம், நியாயத்துக்காகப் போராடுபவர்களையும் அவர்களுக்குத் துணை செய்பவர்களையும் எந்த ஏகாதிபத்தியத்தாலுமே என்றுமே தடுக்கமுடியாது. இவர், நாட்டின் விடுதலைக்காக தங்கள் சுகங்களைத் துறந்தவர்களுக்காக, தன் சுகத்தைத் துறந்தவர். தேசத்தை நேசித்ததால் தாயை விட்டு வந்தவர்களின் தாயாக மாறியவர் நிச்சயம் இவர் ஒரு உயர்ந்த பெண்மணி; உண்மையான அன்னை.

---

ஒரு துணிக்கடையில் இரண்டு பெண்கள் சட்டைத் துணி வாங்கிக் கொண்டிருந்தார்கள். கடையில் வேலை செய்யும் ஒரு சிறுவன் ஒரு துணியை ''பார்சல்'' பண்ணிக் கட்டிக் கொண்டிருந்தான். அவன் கட்டிய சட்டு இறுக்கமாக இல்லாதிருப்பதைக் கண்ட கடை முதலாளி 'என்னடா பெட்டைக் கட்டு கட்டுகிறாய்' என்று ஏசிவிட்டு தான் வாங்கி இறுக்கமாகக் கட்டிக் கொண்டிருந்தார். அப்போது துணி வாங்கிக் கொண்டிருந்த பெண்கள் இருவரும் திரும்பி ஒரு முறை முறைத்து விட்டு இப்படியெல்லாம் சொல்லி பெண்களை இழிவு படுத்தாதீர்கள் என்று சொல்லி விட்டு வந்தார்கள்.

பெண்கள் ஆயுதம் எடுத்து போராடி எதிரிப்படையை அஞ்சி நடுங்க வைத்துக் கொண்டிருக்கும் இவ்வேளையிலும் பெண்களை இழிவு படுத்தும் இவை போன்ற பழமைத் தனமான வார்த்தைப் பிரயோகங்களைத் தவிர்த்துக் கொள்ள நினைக்காதது எதனைக் காட்டுகிறது?

இதற்கான விளக்கத்தை வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.

# விடுதலைப் போரில் ஒரு தாய்

ஆரம்ப காலத்தில் எமது விடுதலைப் போராட்டம், தலைமறைவுப் போராட்டமாக இருந்து, பின்னர் கெரில்லாப் போராட்டமாக மாறி, இப்போது மரபு வழிப் போராக மாறியுள்ளது. ஆனால் ஒன்று மட்டும் மாறவில்லை. அதுதான் மக்களின் ஆதரவு எனும் மாபெரும் சக்தி. ஆனால் மக்கள் தமது ஆதரவை களத்திலே நேரடியாக காட்டியது, ஆனையிறவுப் போரின்போதுதான். போரில் காயமடைந்த போராளிகள் அலறித் துடிக்கும் போது எம்மால் வீட்டில் சும்மாயிருக்க முடியாது என்று சொல்லி வைத்தியசாலையில் தொண்டாற்ற வந்த அன்னையர்களில் ஒருவர்தான் திருமதி சிவக்கொழுந்து அவர்கள்.

எப்போது போனாலும் வைத்தியசாலை வார்ட்டுகளில் இவரைக் காணலாம். ஒரு பெண் தனது வீட்டுக் கடமைகளை விட்டு நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் நாள் முழுதும் சேவை செய்யத் தயாராக இருக்கின்றாள் என்றால், அந்தப் பெண்ணின் சமூக உணர்வையும், பரந்த மனப்பான்மையையும் நாம்சரியாக விளங்கிக் கொள்ளவேண்டும்.

விடுதலைப் போரில் பெண்களின் பங்களிப்பு மிக மிகக் குறைவாக இருந்த காலம் அது. முல்லைத்தீவைப் பொறுத்தளவில் மக்கள் எமது விடுதலைப் போராட்டத்தை வெளிப்படையாக ஆதரிக்க அஞ்சிய நேரம். அந்த வேளையிலும் சிலர் துணிவுடன் எமக்கு ஆதரவாகச் செயல்பட்டனர். எமது போராட்டத்தின் நியாயத்தைப் புரிந்து கொண்டு, எமக்கு படிப்படியாக முல்லைத்தீவில் ஆதரவைத் தேடித் தந்தார்கள். அந்தச் சிலரில் திருமதி சிவக்கொழுந்து அவர்களும் ஒருவர்.

இலங்கை அரசினதும், இராணுவத்தினதும் மனித உரிமை மீறல்களை எதிர்ப்பதற்காக தமிழீழமெங்கும் அன்னையர் முன்னணி தோற்றம் பெற்றபோது, முல்லைத்தீவில் திரண்டெழுந்த அன்னையரை வழி நடத்திச் செல்லும் பொறுப்பை இவர் ஏற்றார்.

1987-இல் லெப். கேணல் திலீபனுக்கு ஆதரவாக முல்லைத்தீவில் திருச்செல்வம் உண்ணாவிரதமிருந்து கொண்டிருந்தபோது முல்லைத்தீவு மக்களெல்லோரும் அங்குள்ள இலங்கை இராணுவ முகாமைத் தொடர்ந்து ஒரு வாரத்துக்கும் மேலாக மறியலில் வைத்திருந்தனர். கிளர்ந்தெழுந்த மக்களோடு இணைந்து திருமதி சிவக்கொழுந்து அவர்களும் அந்த மறியல் போரில் கலந்து கொண்டார்.

மணலாறு காட்டுப் பகுதிக்குள் எங்கள் தலைவர் மறைந்திருப்பதாகச் சந்தேகித்த இந்திய இராணுவம், காட்டுக்குள்ளே வாழ்பவர்களுக்கும் மக்களின் குடிமனைகளுக்கும் இருக்கக்கூடிய தொடர்பைத் துண்டிக்குமுகமாக அளம்பிலிலும் செம்மலையிலும் இரு முகாம்களை அமைத்தது. மேலும் காட்டுப் பகுதிக்கு உணவுகள் போகாவண்ணம் மணலாறுப் பிரதேசத்தின் மீது பொருளாதாரத் தடையை விதித்தது. அத்துடன் தொடராக 27 நாட்கள் கடும் ஊரடங்கு உத்தரவையும் பிறப்பித்தது. தம்மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை எதிர்த்து முல்லைத்தீவு மக்கள் அணி திரண்டனர். 'இந்திய இராணுவமே வெளியேறு", உட்படப் பல கோஷங்களுடன் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை மிலேச்சப் படை ஒன்றின் ஊரடங்கு உத்தரவையும் மீறி நடத்தி முடித்தனர். இந்திய இராணுவத்தினரின் காட்டு மிராண்டித்தனமான நடவடிக்கைகளின் மத்தியிலும் ஒரு பெண்கள் அமைப்பு, பெரும் ஊர்வலத்தை நடத்தி, இந்திய முகாம் பொறுப்பதிகாரிக

ளுடன் வாதிட்டு, தமது கோரிக்கைகளைச் சமர்ப்பித்தது என்றால், அந்தப் பெண்கள் தம் நலனை விட, நாட்டு மக்களின் நல்வாழ்வை எவ்வளவு தூரம் நேசித்தார்கள் என்பது எமக்கு விளங்கும். இந்திய இராணுவத்தினருக்கு ஈழத்து அன்னையரின் மன உறுதியைக் காட்டிய சம்பவங்களுள் ஒன்றான இதில், திருமதி சிவக்கொழுந்து அவர்களின் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கவை.

சென்ற வருடம் பேரெழுச்சியுடன் விடுதலைப் புலிகள் நடத்திய முத்தமிழ்விழாவின் போது ஒழுங்குகளை கவனிக்கும் பணியைச் செய்வதற்காக, முல்லைத்தீவிலிருந்து வந்த அன்னையர்களில் இவரும் ஒருவர்.

ஆனையிறவு மோதல் ஆரம்பமான போதும்கூட, காயமடைந்த போராளிகளைப் பராமரிக்கும் நோக்குடன் முல்லைத்தீவிலிருந்து அன்னையர் குழு ஒன்று வந்தபோது தனது சுகயீனமான உடல்நிலையையும் பொருட்படுத்தாது திருமதி சிவக்கொழுந்து அவர்களும் புறப்பட்டு வந்துவிட்டார். வரும் போது பூநகரிப் படகுத்துறையாலேயே வர வேண்டி இருந்தது. அப்போது அவர் ''போகும் போதுதான் இந்தப் பாதை ஆனால் வரும் போது ஆனையிறவுப் பாதையால் வரலாம்'' என்று சொல்லியவாறு உற்சாகமாகவே வந்தார்.

இரத்த அழுத்தமும் மார்புப் புற்று நோயும் தம்மைத் துன்புறுத்தியதையும் பொருட்படுத்தாது, காயமடைந்து வருகின்ற போராளிகளைப் பராமரிக்க வேண்டும் என்பதற்காகவே அவர் தன்னை வருத்திக் கொண்டார். இவரது நோயைப் பார்த்த நாம் இவரைத் திரும்பிப் போகுமாறு கூறிய போதும், மறுத்து விட்டார். ஆனையிறவு மோதல முடிவடைந்து 2 வாரங்களின் பின்னரேயே, அதுவும் மிகுந்த மனவருத்தத்துடனேயே, '' திரும்பிப் போகும் போது ஆனையிறவு வழியாகப் போகலாம் என்று நினைத்தேன் ஆனால் எவ்வளவோ இளம் உயிர்களைப் பறிகொடுத்து விட்டுப் போகிறோமே'', என்று சொல்லியவாறு போனார்.

ஊருக்குத் திரும்பியதும் அவரது நோய் அவரைப் பலமாக வருத்தியது. இறுதியில் அவர் தனது நோய்க்குப் பலியாகி விட்டார்.

இந்த உயர்ந்த அன்னைக்கு அனைத்துத் தமிழீழப் பெண்களின் சார்பிலும் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.



## திருமதி ஞா. சிவக்கொழுந்து

(அளம்பில், மணலாறு)

பிறப்பு:- 25-06-1941

இறப்பு:- 12-12-1991

கணவர்:- ஞானமுத்து

பிள்ளைகள்:-

ஜெபநேசன், சியாமளா, மஞ்சுளா, சர்மிளா

PLEASE DO NOT REMOVE
TAMIL CO-ORDINATING COMMITTEE
MELBOURNE AUSTRALIA

# இருட்டல்ல இவள் வாழ்வு

என்ரை புருசனை எல்லாருமாய்ச் சேர்ந்து
கொண்டு போட்டினம்.
இன்றைக்கு......
இஞ்சை
சந்தோசமாய்
இருக்க
விட்டிருக்
கலாம் தானே, தூக்கி அனுப்பிச்சினம்.
கடைசியாய் அவரி
ன்ரை உடம்பை கூடக்
பாக்க வழியில்லா
மல் போட்டுது.
இன்றைக்கு......

''ஒருத்தரும் எனக்குக் கிட்ட நிக்க வேண்டாம். எல்லாரும் போங்கோ. எல்லாருமாச் சேர்ந்து என்ரை புருசனைக் கொண்டு போட்டீங்கள். போங்கோ, எல்லாரும் போங்கோ.''

ஆவேசம் பிடித்தவள்போல் கத்துகிறாள் சத்தியா.

''சத்தியா, நாங்கள் சொல்லுறதைக் கொஞ்சம் பொறுமையாய் கேள்,''

என்று அவளை நெருங்கி ஆறுதல் சொல்லப்போன அவளது மாமியாரையும் மச்சாள்மாரையும் பார்த்துத் தொடர்ந்து கத்துகிறாள், அவள்.

''என்ரை புருசன் இஞ்ச நல்லபடியாத்தானே உழைச்சுக் கொண்டிருந்தவர். நாங்கள் சந்தோசமாகத்தானே இருந்தம். எங்களை இப்பிடிப் பிரிச்சுப் போட்டீங்களே. நாங்கள் என்ன செய்தம் உங்களுக்கு?''

என்று கேட்டுவிட்டு முகத்தை இரு கைகளாலும் பொத்திப் பிடித்தபடி விம்மி விம்மி அழுகிறாள். அவளைத் தேற்றுவது கஷ்டம் என்று தெரிந்ததாலும், அவர்களுக்கு அவர்களின் மனச்சாட்சி உறுத்தியதாலும் அவளை விட்டு நகர்ந்து, அந்த வீட்டு விறாந்தையின் ஓர் மூலையில் போய் உட்காருகிறார்கள். சத்தியாவின் விம்மல் ஒலியைத் தவிர வேறு எந்தச் சத்தமும் அந்த வீட்டில் கேட்கவில்லை. அந்த ஒலியும் ஓய்ந்தபோது மயான அமைதி மட்டும் நிலவியது.

செய்தி கேட்டு உற்றார், உறவினர், நண்பாகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார்கள். ஆறுதல் சொல்ல வந்தவர்களை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருக்கிறாள். இனி அழ முடியாது என்று அழாமல் இருக்கவில்லை. ஆறுதல் சொல்ல வந்தவர்களில் பலரும் அன்று தன் கணவனுக்கு வெளிநாடு போக வேண்டும் என்பதை வற்புறுத்தியவர்கள் என்பதால், அவளுக்கு அவர்களைப் பார்க்க அழுகை வரவில்லை. தன்னில் அன்பு வைத்தவர்களைக் கண்டால் மட்டுமே தன் துக்கத்தைக் கொட்டி அழ வேண்டும் போலிருந்தது.

அப்போதுதான் அவளின் சிநேகிதி ரமணி வந்தாள். சிறிது நேரத்துக்கு முன்புதான் அவளுக்கு அந்தச் செய்தி தெரிந்தது. செய்தி கேட்டவுடனேயே ஓடி வரத் துடித்தாலும் வருவதற்கு ஒரு வழியும் இருக்கவில்லை. சத்தியாவின் வீட்டிலிருந்து 15 மைல்களுக்கப்பால் உள்ள ஊரிலிருக்கும் ரமணி, தன் அயல் வீட்டில் ஒரு சைக்கில் வாங்கி இங்கு வந்து சேர நேரமாகி விட்டது. ரமணி தன்னருகே வந்தவுடன் அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கத்தினாள் சத்தியா.

"ரமணி, பார் ரமணி, என்ரை புருசனை எல்லாருமாச் சேர்ந்து கொண்டு போட்டினம். கடைசியா அவரின்ரை உடம்பைக்கூட பார்க்க வழியிலலாமல் போட்டுது. இஞ்சை சந்தோசமா இருக்க விட்டிருககலாம்தானே. துரத்தி அனுப்பிச்சினம். இன்டைக்கு..... இன்டைக்கு..."

மேலே சொல்ல முடியாமல் விம்மி விம்மி அழுதாள்.

சத்தியாவும் மதனும் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவர்கள். சத்தியா ஏழைக் குடும்பத்தில் மூத்த பெண். அவளுக்குப் பின் 3 தங்கைகள்' 2 தம்பிமார். மதன் நல்ல ஒரு உழைப்பாளி. சோம்பேறித்தனம் ஒரு நிமிடம் கூட அவனிடம் அணுகியதில்லை. சீதனம் வாங்காமல் சத்தியாவைத் திருமணம் செய்யக் கூடாது என்று அவனின் பெற்றோரும் தங்கைமாரும் சொல்லி விட்டார்கள். ஆனால் சீதனம் வாங்காமல்தான் சத்தியாவைத் திருமணம் செய்வது என்று உறுதியாய் நின்று, அவ்வாறே சீதனம் வாங்காமலேயே அவளைத் திருமணமும் செய்தான்.

சத்தியாவை எப்போதுமே கரித்துக் கொட்டிக் கொண்டிருப்பதுதான் மதன் வீட்டாரின் வேலையாகப் போய் விட்டது. என்ன கதை வந்தாலும் கடைசியில், ''உடுத்த உடுப்போடை வந்தவள் தானே'' என்று மாமியார் சொல்லுவதும், ''அண்ணாவை மருட்டிக் கல்யாணம் செய்து போட்டாள்'' என்று மச்சாள்மாரும் சொல்வதைக் கேட்டுக் கேட்டு சத்தியாவுக்கு உள்ளம் மரத்துப் போய் விட்டது, சீதனம் இல்லாமல் வந்ததால் தான் எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணியவளாக கணவன் இல்லாத நேரங்களில் வீட்டில் மாமியாரும் மச்சாள்மாரும் தன்னை ஏசுவதையும் துன்புறுத்துவதையும் தன் கணவனிடம் சொல்லாமலேயே வாழ் நாளைக் கழித்துக் கொண்டிருந்தாள். மதனிடம் அவர்கள் ஏசுவதில் ஒன்றைச் சொல்லியிருந்தால்கூட அவர்களிடமிருந்து பிரிந்து தனியே இருவரும் வாழ்ந்திருக்கலாம். ஆனால் தன்னால் அக்குடும்பம் பிரியக் கூடாது என்பதால் எல்லாவற்றையுமே அவள் மௌனமாகச் சகித்துக் கொண்டாள். அவளால் அவன் வீட்டில் எடுத்த ஒரு தீர்மானத்தை மட்டும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

'எடமதன், நீ இஞ்ச இருந்து எப்பிடித்தான் கஷ்டப்பட்டு உழைச்சாலும் உன்ரை தங்கச்சிமார் ரெண்டு பேருக்

கும் சீதனம் சேர்க்க மாட்டாய். வெளிநாட்டுக்குப் போய் உழைச்சாத்தான் கெதியிலை காசு சேர்க்கலாம்.'

என்று மதனின் தாய் ஒருநாள் சொன்னபோது,

"அம்மா, என்னை வெளிநாட்டுக்குப் போகச் சொல்லி மட்டும் வற்புறுத்தாதேங்கோ. இஞ்ச இருந்து எவ்வளவும் நான் கஷ்டப்படுவன். என்னாலை வெளியிலை போக ஏலாது. ஒரு நிமிசம் கூட ஓய்வெடுக்காமல் உழைச்சு என்ரை தங்கச்சிமாருக்குக் காசு சேர்ப்பன்"

என்று அவன் சொல்ல

"அண்ணை நீ இஞ்ச உழைச்சு நாங்கள் கல்யாணம் கட்டுறதெண்டால் அது இந்த ஜென்மத்திலை இல்லை"

என்று மதனின் தங்கைகள் கேலி செய்தார்கள். அம்பாகப் பாய்ந்து உள்ளத்தைத் தைத்த அந்த வார்த்தைகளால் நிலை குலைந்து போனான். தனக்குப் போக விருப்பமில்லாவிடினும், போயே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தால் அவன் உள்ளம் புழுவாய்த் துடித்தது. சத்தியாவுடன் தனியே இருந்த போது,

'சத்தியா, என்னை யாருமே புரிஞ்சு கொள்ளுகினமில்லை. இந்த மண்ணை விட்டுப் போறதுக்கு எனக்கு விருப்பமில்லை. ஆனால் போகச் சொல்லித் துரத்துகினம். நான் என்ன செய்யிறது?

என்று உடைந்த குரலில் அவன் சொன்னபோது, சத்தியாவின் கண்கள் கலங்கி விட்டன. தன்னை விட்டு அவன் வெகுதூரம் போகப் போகின்றான் என்ற நினைப்பை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அவன் தனது படிப்பை இடையில் நிறுத்தி விட்டு, தோட்டத்தில் உழைத்துத் தனது தங்கைகளைப் படிப்பித்தான். இருவருமே க.பொ.த. (உ/த) வரை படித்து விட்டு, நான்கு பாடங்களும் ஒரே தடவையில் சித்தியடையாத நிலையில் வீட்டிலே சும்மா இருந்தனர். தொடர்ந்து அவர்கள் படிக்க விரும்பியிருந்தால், அவன் படிக்க வைத்திருப்பான். ஆனால் அவர்கள் தொடர்ந்து படிக்க விரும்பவில்லை. ஏதாவது வேலை செய்யவும் நினைக்கவில்லை. "வெளியே வேலை தேடித் தருகிறேன்," என்று மதன் அவர்களைக் கேட்டால்,

"ஏனண்ணா, எங்களைப் பாக்கிறதுக்கு உனக்குக் கஷ்டமாயிருக்கோ? நாங்கள் பாரமாயிருக்கிறமெண்டா எங்கையாவது ஆத்தில குளத்தில தள்ளி விடன். அதுவுமில்லையெண்டா சீதனம் இல்லாமல் ஆரும் ஒரு தோட்டக்காரனுக்கு எங்களை முடிச்சுக் குடு",


என்று சொல்லிக் கண்ணைக் கசக்குவார்கள். தாயார் அதனைப் பார்த்து விட்டு,

"ஓமடா மதன். நாங்கள் உங்களுக்குப் பாரமாயிருக்கிறமெண்டால் எங்களை எங்கையாவது பிடிச்சுத் தள்ளி விட்டு நீயும் இவளும் சந்தோசமாயிருங்கோ"',

என்று பக்கத்தில் நிற்கும் சத்தியாவைச் சுட்டிக் காட்டிவிட்டு ஒப்பாரி வைப்பாள். தான் ஒரு தோட்டக்காரனாக இருப்பதே தெரியாத மாதிரி தோட்டம் செய்யும் ஆண்களை அவர்கள் இழிவு படுத்துவதை அவனால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. ஆனால் தான் மேலும் ஏதாவது கதைத்தால் பிரச்சனை இன்னும் அதிகமாகுமென்று மௌனமாக இருப்பான். 'ஏ.எல். படிச்சனாங்கள். ஒரு படிச்ச, நல்ல உத்தி

யோகம் பார்க்கிற மாப்பிள்ளையைத் தான் கலியாணம் கட்டுவம் என்று சொல்லாமல் சொல்லும் தங்கைகளுக்கு இதற்குமேல் என்ன சொல்வது என்று தெரியாமல் மௌனமாகி விடுவான்.

இப்போது வெளிநாடு போகத்தான் வேண்டுமென்று சொல்லி விட்டார்கள்.



வெளிநாட்டுக்குப் போய் வேலை செய்வது என்பதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

"சத்தியா, உன்னை விட்டிட்டு நான் எப்பிடிப் போவன், என்னாலை முடியாது, சத்தியா இந்த மண்ணில இருந்து எவ்வளவும் நான் கஷ்டப்படத் தயாரா இருக்கிறன், எண்டு சொல்லுறதை எவருமே ஏற்றுக் கொள்ளுகினமில்லை. என்னாலை முடியாது. என்னாலை போக முடியாது"

என்று அவளிடம் தன் மனக்குறைகளைக் கொட்டினான். அவனைத் தேற்ற முடியாமல் சத்தியா தத்தளித்தாள். தன் மனவேதனைகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு,


"ரெண்டு வருசம்தானே மதன். ஒரு மாதிரிப் பல்லைக் கடிச்சுக் கொண்டு வேலை செய்யுங்கோ. தங்கச்சிமாருக்குக் கலியாணம் முடிஞ்ச உடனே வாங்கோ.

[33ம் பக்கம் பார்க்க]

# வீரத்தாயின் சோகத் துடிப்புக்கள்

சித்திரனே, சித்திரனே,
என் அன்பு மகனே,
கருவிலே திருவுடையவனாய்
நீ பிறந்த போது
உன்னைப் பிரசவிக்க
கால் நடையாய்
மருத்துவ மனை நோக்கி
மனச் சுமையுடனே சென்றேன்.

வெகு சுலபமாய்
அவர்களுடன் உன்னையும்
பொல்லாத வறுமையை
பங்கு போட வைத்து
பழக்கப் படுத்திக் கொண்டேன்.
நல்ல பிள்ளைகளாக
நாடு போற்ற
நீங்கள் வாழ வேண்டுமென்ற!



உன் உடன் பிறப்புக்களுக்கு
அடுத்த வேளை உணவு
அனேகமாகத்
தீர்மானிக்கப் படவில்லை.

நீங்காத கனவு
என்னுள் நிலைத்து நின்றது.
எம். ஜி. ஆர் படங்களில் வரும்
ஏற்றம் நிறைந்த,

வீரம் மிகுந்த
பாடல்களை எல்லாம்
தாலாட்டாய் பாடி
என் தாய்மையை நிறைத்தேன்.
நீங்கள் அறுவரும்
ஒரு போதும் சண்டையிட்டதில்லை.
நீங்கள் அறுவரும்
ஒரு போதும்
என் வார்த்தை மீறியதில்லை.
நீங்கள் அறுவரும்
ஒரு போதும்
சோம்பியிருந்ததில்லை.
ஒரு வேளை உணவையும்
அதற்குரிய உழைப்பையும்
செய்த பின்னே
உண்ணப் பழகினீர்கள்.
இரண்டு வயதில் நீ
ஏற்றி வீட்டமாமரத்தின்
உச்சியைத் தொட்டாய்.
எட்டு வயதிலிருந்து
விளையாட்டுப் போட்டிகளில்
பரிசினைத் தொட்டாய்,
நாலு வயதில் உன்
நண்பரையும் கூட்டி
நான் ஒரு கேள்வி கேட்டேன்.
"உங்களுக்குள்ளே
ஒரு இலட்சியம் உண்டா" என்று,
பாலர் பாடம் அது.
வீதியிலே அவ் வேளை
ஆமி ஒரு வாகனத்தில்
விரைந்து கொண்டிருந்தான்.
பாதியிலே எழுந்தோடிப்
பார்த்து விட்டு வந்து சொன்னாய்
'எண்ணற்ற தமிழர்களின்
உயிர் குடித்த சிங்களவன்
இவன் உயிர் பறிப்பது
என் இலட்சியம்,
அதன் பின் நானிறப்பேன்
இது சத்தியம்' என்று.
இன்றெண்ணிப் பார்க்கிறேனடா
என் இளம் புலியே,
சித்திரனே சத்திரனே,
உன்னை ஈன்ற பொழுதில்
நான் உவக்க வில்லை
வறுமையின் பிடியில்
ஏன் பிறந்தாய் மகனே
என்று தான் அழுதேன்.
இன்று
இலட்சியத்தின் வேட்கைக்கு
உயிர் கொடுத்தாய் என்றெண்ணி
களிப்பினிலே
பூரித்தேன் - புளகித்தேன்.
ஒரு சொட்டுக் கண்ணீரும்
விட மறந்தேன்.
பொல்லாத உலகம்
என்னைப்
புரிந்து கொள்ள மறுக்கிறது.
கல்லான மனம் என்று
காறி உமிழ்கின்றது.
களத்திலே மாண்டுபட்ட
கணக்கற்ற புலிகளின்
பிணக் குவியலோடு
சேர்ந்து நீ வரவில்லை.
நாள் முழுதும் பார்த்து நான்
தாங்க மாட்டேன் என்றா?
"பூமாலை கட்டிப் பல
புகழுடலில் போட்டு விட்டாய்,
போதுமம்மா கைவலிக்கும்"
என்றெண்ணிக்கொண்டாயா?
வாய்க்கரிசி போடுவதற்கும்
மண் அள்ளிப் போடுவதற்கும்
வாய்ப்பளிக்கக் கூடாது
என் கை வாடிவிடும்
என நினைத்து
நீ நின்ற களத்திலேயே
நீறாகிப் போனாயா?

உன் குருதி பட்ட
சிறு துளியும்
என் இறுதி வரை தெரியாமல்
உறுதியுடன் போனதனை
கொற்றம் நிறைந்த ஒரு அவையில்
பல பேர் உன்னை
நித்தம் புகழ்ந்த செய்தி
என் நெஞ்சில் நிற்கிறது.
நிறைந்த நீர்ப்பரப்பில்
மீனாய் நெளிந்ததையும்,
ஆழக்கிணற்றினுள்ளே
தாழப் புகுந்ததையும்,
கைகளையே காலாக்கிக்
கால் தூக்கி நடந்ததையும்
மீளா நிலையாக்கி
நீ மறைந்து போனாயோ ?
நாடக மேடைகளில்
நாயகனாய் நீ வருவாய்.
சிவாவின் நடிப்பென்றால்
அவாக் கொள்வார் நம்மூரார்.
கவி எழுதும் போது எனக்கு
அடி எடுத்துக் கொடுப்பாய் நீ.
சுத்தானந்த பாரதியின்
முத்தான பாடல் ஒன்று
உன் சத்தான கருத்தோடு
அம்மா எழுதியது.
அருமையாய் பாடுவாய் நீ.
அம்மா நான் போராடப் போறேன்
கையில் அன்புடன்
ஏ.கே.யை தந்தனுப் பென்னை
கவிதையின் நாயகனே,
நீ காவிய நாயகனாகி
என் கண்களை நிறைக்கும் நாளை
காணவே ஒரு கோடி
கனவோடு காத்திருந்தேன்.
மண் மீட்கப் போன
உன் பொன்னுடல் கூட
என் கண்ணூடாய் காணும்
தவமற்றேனையா.
மெய்யாக உன் மீது
மெய்யன்பு வைத்தேன்
உன் மெய் காணமாட்டாமல்
மெய்வி தீர்த்தேனைய்யா.
கையால் உனை அணைத்துப்
பாலூட்டி மகிழ்ந்தவள் நான்.
பாழும் புதை குழிக்கும்
பாலூற்றும் நிலை அறுந்தேன்.
உச்சி முகர்ந்து நாளும்
நெய் தடவி நீர் வார்த்தேன்
உயிர் பிரிந்த உன்னுடலை
உவர் சேற்றில் பறி கொடுத்தேன்
வெந்தணல் ஆறுமடர்
என் வெந்துயர் ஆறிடுமோ ?
செந்தமிழ் ஈழத்தின்
பைந்தளிர் குருத்துக்களை
இம் மண்ணில் கருக்கியும்
சிறுதுளிக் குருதி துணுக்களாக்கி
சிறு நரிக்கும் காக்கைக்கும்
இரையாக்கும் சிங்களவன் இனம்
இங்கு சிதைந்தழிந்து போகட்டும்
எம் நெஞ்சின் ஓலங்கள்
எழுந்தொரு பேயாகி
எத்தர்கள் கூட்டத்தை
எரித்துப் பொசுக்கட்டும்.
அறம் கூடித் தமிழ்க்கவிகள்
நாவாலே பொழியும் நல்ல
தமிழ்ப்பாவாலே அழிக்கட்டும்.
பொங்கி வரும் சுதந்திரத் தீ
சுற்றி வளைத்து நின்று
பற்றி எரிக்கட்டும்.
நம் தமிழர் குருதி சிந்தி
செம்மண்ணாய் ஆன தமிழ்
மண்பிளந்து விழுங்கட்டும்.
பேய்களாம் சிங்களப்

பேடிகள் யாவரையும்
கூடி ஒரு குழியில்
கொட்டி மூடட்டும்
ஆவி தழைத்த எங்கள்
ஆருயிர் வீரர்களும்
நீயும் களித்திட
இதை நிறைவேற்றிக் காட்டுவோம்.
நீங்கள் கொண்ட பெரும்
இலட்சியப் போர்ப்பாதையிலே
தமிழீழம் தொடர்ந்து வரும்
நம்பிக்கை இழக்காதே
சாவிலும் சாந்தி பெறு.
புலியாகிப் போன புனிதனே
உன் நினைவு
நீங்காது நிலைத்திருக்கும்
நிம்மதியாய்த் துயில் மகனே.
சித்திரனே சித்திரனே
நித்திலமே பொற்சிலையே.

ஆனையிறவுச் சமரில் வீரச்சாவெய்திய வீர வேங்கையின் அன்னையின் உள்ளத்துடிப்புக்கள் சொல்லிய கவிதை இது.

சுமார் இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட கதைத் திரைப்படங்களை இந்தியா இதுவரை தயாரித்துள்ளது. இதை உலக சாதனையென்று சொல்லலாம். இந்தியத் திரைப்படங்கள் பற்றிய ஆய்வொன்று சுமார் 46 பெண் கதாபாத்திரங்களில் பன்னிரண்டு பேர் மட்டுமே வெளியில் வேலை பார்ப்போராகவும் ஒன்பது பேர் பாரம்பரிய தொழில்களை பார்ப்பவராகவும் படைக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளதாக யுனெஸ்கோ நிறுவன MANY VOICES ONE WORLD என்ற நூல் அறியத்தருகிறது.

(28-ம் பக்கத் தொடர்ச்சி)

ரெண்டு பேரும் இந்த மண்ணிலை சந்தோசமா வாழலாம். கவலைப்படாதேங்கோ'' என்று ஆறுதல் படுத்தினாள்.

விருப்பமேயில்லாமல் வெளிநாட்டுக்குப் புறப்பட்டான் மதன். சத்தியா ஒரு மாதிரிக் கஷ்டப்பட்டு முகத்தில் புன்னகையை வரவழைத்துக் கொண்டு விடை கொடுத்தாள். அவளின் மனநிலை அவனுக்குத் தெரியாமலில்லை. சீதனமில்லாமல் வந்ததால் எத்தனை வசவுகளைத் தாயிடமிருந்தும் தங்கைகளிடமிருந்தும் அவள் வாங்கினாள் என்பதும் அவனுக்குத் தெரியாமலில்லை. தான் போனால் அவள் தனியே இருந்து கஷ்டப்படப் போகின்றாள் என்பதும் அவனுக்குத் தெரியாமலில்லை. போகும்போது பரிவுடன் அவளது கரங்களை ஒருமுறை பிடிக்கக் கூட அவனால் முடியவில்லை. அதற்கும் வீட்டுக்காரர் சத்தியாவுக்கு ஏதும் சொல்வார்கள் என்பதும் அவனுக்குத் தெரியும்.

''போயிட்டு வாறன், சத்தியா'', என்று சொல்லக்கூட முடியாமல் எல்லோருக்கும் பொதுவாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

மதன் போய் இரண்டு மாதங்களின் பின் பணம் அனுப்பத் தொடங்கினான். அவன் உழைத்து அனுப்ப அனுப்ப இங்கே அவன் குடும்பத்தவரின் தேவைகளும் அதிகரித்துக் கொண்டே சென்றன. சீதனத்துக்காகச் சேர்த்த காசை விட, வீணில் செலவு செய்த காசே அதிகமாக இருந்தது. ஆனால் மதன் அனுப்பிய காசிலிருந்து ஒரு சல்லிக் காசு கூட சத்தியாவுக்குக் கொடுக்கவில்லை. தமக்காகத்தான் அவன் வெளி நாடு போனான் என்ற எண்ணத்தில் சத்தியாவின் கணவன் அனுப்பும் பணத்தில் சத்தியாவுக்கும் செலவு செய்யும் உரிமையுண்டு என்பது பற்றி அவர்கள் நினைக்கவேயில்லை. அவர்களுக்கு அனுப்பும் கடிதத்தில் கூட அவளுக்குத் தனியாக அனுப்புவான். ஆனால் உள்ளத்து உணர்வுகளை அப்படியே வெளிப்படுத்துவதாக அமையாது. ஏனென்றால் தனது கடிதம் எல்லோராலும் வாசிக்கப்பட்ட பின்னர்தான் அவள் கைக்குக் கிடைக்கும் என்பது அவனுக்குத் தெரியும். சத்தியாவுக்கு, மதனின் காசில் தனக்குத் தரவில்லையே என்பதில் கவலையில்லை. அவன் வந்தால் மட்டும் போதும் என்பதுதான் அவளின் எதிர்பார்ப்பாக இருந்தது.

அப்படியிருக்கும் போது தான் இன்று காலை அந்தச் செய்தி இடிபோல வந்து சேர்ந்தது. கார் விபத்தொன்றில் அவன் அகால மரணமடைந்து விட்டான் என்ற செய்தி அவள் காதில் விழுந்தபோது உலகமே இடிந்து தலையில் வீழ்ந்தது போலிருந்தது அவளுக்கு. சொந்த மண்ணில் வாழ ஆசைப்பட்ட தனது கணவன் ஜேர்மனியில் அனாதையாக மரணமடைந்து விட்டான் என்பதை அவளால் இன்னும் ஜீரணிக்க முடியவில்லை. இறுதியாக அவனின் உடலைப் பார்ப்பதற்குக் கூட தன்னால் முடியவில்லை என்பதை நினைக்க நினைக்க, அவனை அனுப்பிய எல்லாரையும் கொன்று விட வேண்டும் போல் ஒரு வெறி உணர்வு ஏற்பட்டது அவளுக்கு.

- - - - - -

அதனால்தான் இப்படிப் பைத்தியம் பிடித்தவள் போல் கத்தி அழுதுகொண்டிருக்கிறாள். தன் தோளில் சாய்ந்து குழந்தைபோல் தேம்பிக் கொண்டிருக்கும் சத்தியாவை பரிவுடன் அணைத்தபடி உட்கார்ந்திருந்தாள் ரமணி. அவளின் மடியிலே முகம் புதைத்துத் தொடர்ந்து அழுதுகொண்டிருந்தாள் சத்தியா.

திடீரென சத்தியாவின் மனக்கண் முன் அவளின் எதிர்காலம் தெரிந்தது. கணவன் இருக்கும்போதே தன்னைப் படாதபாடு படுத்திய மச்சாள்மாரை யோசித்துப் பார்த்தாள். படித்த பெரிய உத்தியோகம் பார்க்கும் ஆண் தான் தமக்குக் கணவனாக வர வேண்டும் என்பதற்காக, வெளிநாட்டுக்குப் போகவே விருப்பமில்லாத தமது தமையனை வலுக் கட்டாயமாக வெளிநாட்டுக்கு அனுப்பியவர்கள் இனிமேல் தாங்கள் முன்பு உதறித் தள்ளிய வேலைக்காக அலைவார்கள். அந்த வேலையையும் எடுப்பார்கள். அதன்பின் 'விதவை' என்ற பட்டத்தைத் தன்மேல் சுமத்தி விட்டுத் தன்னை ஒரு வேலைக்காரியாக வீட்டுக்குள் முடக்குவார்கள்.

'கடவுளே, இனியும் நான் இவையோடை இருந்து நரக வாழ்வை அனுபவிக்கிறதோ? வேண்டாம்...வேண்டாம்... என்ரை காலில நான் நிக்க வேணும். என்ரை படிப்பையும் திறமையையும் இந்தச் சமூகத்தின்ரை நன்மைக்குப் பயன் படுத்த வேண்டும் இந்த வட்டத்தை விட்டு நான் வெளியேறத்தான் வேண்டும். இதுக்கெல்லாம் ரமணி கட்டாயம் எனக்கு உதவி செய்வாள்'',

என்று எண்ணிய சத்தியாவின் கரங்கள் ரமணியின் கரங்களை இறுகப் பற்றின. திடீரெனத் தன் கரங்கள் இறுக்கப்பட திடுக்கிட்டவளாக சத்தியாவை நிமிர்ந்து பார்க்கிறாள் ரமணி. சத்தியாவின் முகத்தில் தெரிந்த தெளிவு ரமணிக்கு வியப்பை அளித்தாலும், மகிழ்ச்சியாக இருந்தது இருண்டு போய் விட்டதே, என சத்தியா இடிந்துபோய் விடவில்லை என்பதைப் புரிந்து கொண்ட திருப்தியில், சத்தியாவை அன்புடன் வருடிக் கொண்டிருந்தாள் ரமணி.

முற்றும்

எந்த ஒரு அரசியல் புரட்சியையும் தொடர்ந்து ஒரு நாடு முன்னேற வேண்டுமானால், கல்லாமையும் இல்லாமையும் இல்லாமல் போக வேண்டுமானால் அந்த நாட்டிற்கு முக்கியமான தேவை. முதற் பெருந்தேவை பண்பாட்டுப் புரட்சியே. பண்பாட்டுப்புரட்சியின் காவலராக நம்மை ஆக்கிக் கொண்டு நம் பண்பாட்டின் நல்ல அம்சங்களைக் கிரகித்துக் கொண்டு தன்மயமாக்கிக் கொண்டு, இதிலுள்ள மூடக் கட்டுக்களைத் தகர்த்தெறிந்து புத்தம் புதிய சமூதாயத்தைப் படைக்க வேண்டும்.

'பெண்கள் படைப்பில் பெண்கள் என்ற நூலிலிருந்து'

# சமகால கண்ணோட்டம்

காலம் காலமாகப் பெண்கள் மீது திணிக்கப்படும் ஒடுக்குமுறை வடிவங்களில் ஒன்றுதான் பெண்கள் மீது பிரயோகிக்கப் படும் வன்முறையாகும் ஆண் இனம் பெண் களை அடிமைப்படுத்தி வைத்திருப்பதற்கு கையாளும் மிகவும் கொடுமையான, அநீ தியான வழிமுறைகளில் ஒன்றுதான் இந்த வன்முறை. இந்த வன்முறையானது பெண் களின் உரிமையை, சுதந்திரத்தை, கௌர வத்தை மீறும் ஒரு பாரதூரமான இழி செயல் மட்டுமன்றி ஆண் ஆதிக்கத்தை பெண்கள் மீது திணிக்கும் அதிகாரப் பிர யோகச் செயற்பாடு என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பெண்கள் மீதான இந்த வன்முறைப் பிரயோகம் பல வடிவங்களில், பல பரி மாணங்களில் தாண்டவமாடுகிறது. சமூக வாழ்வின் மூலக் கூறான குடும்ப அமைப்பை எடுத்துக்கொள்வோம். இந்தக் குடும்ப உறவும் ஆணாதிக்க உறவு வலை களால் பின்னப்பட்டிருக்கிறது. இந்த உற வுகளிலும் பெண்களுக்கு எதிரான வன் முறையின் கோரமான வெளிப்பாடுகளை நாம் காணலாம். கணவன் மனைவிக்கு உதைப்பதும், அண்ணன் தங்கைக்கு அடிப் பதும், தந்தை மகளை துன்புறுத்துவதும் இப்படியாக பெண்கள் குடும்பச் சூழலுக் குள் வதைக்கப்படுகிறார்கள். எமது பண் பாட்டுக் கோலங்கள், பழைமைவாதக் கோட்பாடுகள், மூட நம்பிக்கைகள் - ஒட்டு மொத்தத்தில் ஆண்களால் படைக்கப்பட்ட 'மனிததர்ம' சாஸ்திரங்கள் எல்லாம் ஆணாதிக்க வன்முறையை நியாயப்படுத் தத் தவறுவதில்லை.

எமது சமூக வாழ்வில் ஆண் - பெண் உறவு பெறும் ஆதிக்க உறவாக, அடி மைத்தனத்தின் உறவாக, பெண்களை இழிமைப்படுத்தும் உறவாக, அமையப் பெற்றிருக்கிறது. தாம்பத்திய தர்மம் என் றும், அறநெறி வாழ்வு என்றும், புருச பக்தி என்றும் சித்தாந்த ரீதியில் பெண் ணினத்தைக் கறைப்படுத்தி வைத்திருப்ப தோடு, இந்த ஆதிக்கத்தை நிலை நாட்ட ஆணினம் வன்முறையையும் கையாண்டுவரு கிறது. ஆணின் வன்முறையையும் ஒரு பண் பாட்டுக்கோலமாக, குடும்ப, சமூக உறவு களின் தவிர்க்க முடியாத ஒரு தண்டனை யாக, நிர்ப்பந்தமாக பெண்ணினமும் அதி னைச் சகித்து வருகிறது. சாதாரண வாழ் வின் சாதாரண நிகழ்வு என்ற ரீதியில் தனக்கு எதிராகப் பிரயோகிக்கப்படும் வன் முறையைப் பெண்ணினம் ஜீரணித்துக் கொள்கிறது. இந்த மனப்பான்மை பெண் கள் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது. முதலில், பெண்ணினம் இந்த அடக்கு முறை வடிவத்தின் கொடூரத்தை, அநீ தியை புரிந்து கொள்ள வேண்டும்.

அண்மையில் எம்மிடம் ஓர் வழக்கு விசாரணைக்கு வந்தது. ஓர் ஆண் தனது இரண்டாவது மனைவியை தென்னம் மட்டையால் அடித்த போது அந்தப் பெண் இறந்து விட்டாள். அப்பெண் ஓர் நோயா ளியாக இருக்கும் போது இந்தக் கொடுமை நடந்தது. திட்டமிட்ட கொலையை விட இது மோசமானதாகும். மனிதத் தன் மையே இல்லாமல் அந்தக் கணவன் நடந் திருக்கிறான்.

இது எம்மிடம் வந்த வழக்குகளில் ஒன்று என்பதால் இப்படி ஒரு கொலை நடந்தது தெரிந்துள்ளது. எமக்குத் தெரியாமல் மறைமுகமாக இப்படி எத்தனை கொலைகள் நடந்திருக்கும். ஒரு குடிகாரக் கணவன் பல தடவைகளில் தனது துன்புறுத்தல்களினால் மனைவியைக் கொலை செய்ய முயன்றிருப்பான். குடிகாரன் ஒருவன் குடித்து விட்டு வந்து கத்துவதும், பாத்திரங்களைத் தூக்கி எறிவதும் மனைவி பிள்ளைகளுக்கு அடிப்பதும் பக்கத்து வீடுகளுக்கு தெரியக் கூடியதாக இருக்கும். சில வீடுகளில் கணவன் மனைவிக்கு அடிப்பது எவருக்குமே தெரியவராமல் இருப்பதுண்டு. இப்படி பல வன்முறைகள் பல வீடுகளில் மௌனமாக அரங்கேறிவருகிறது. ஆனால் பெண்களோ தமக்கு குழந்தைப் பருவத்திலிருந்தே சொல்லித்தந்த 'கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்' என்ற பழைமைக் கருத்துக்களிலிருந்து விடுபடப் பயந்து கணவனின் கொடுமைகளைச் சகித்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வீட்டுக்குள் நடக்கும் பண்பற்ற, மனிதத் தன்மையற்ற செயல்கள் போன்ற சில வன்முறைகள் வெளியேயும் ஆங்காங்கே சில இடங்களில் நடக்கின்றன, என்பதை அண்மைக் காலத்து சில நிகழ்வுகள் வெளிப்படுத்துகின்றன......

யாழ்ப்பாண சந்தி ஒன்றில், சைக்கிளில் வந்த மாணவியை இடை நிறுத்தி, ஓர் மாணவன் அவள் கன்னத்தில் பல அறைகள் கொடுத்து தாக்கினான். இந்த நிகழ்வு மிகவும் அண்மைக் காலத்து சம்பவம். படித்த மாணவன் ஒருவனின் பண்பற்ற செயல் இது. அதனையிட்டு பெண்கள் எவரும் எவ்விதமான எதிர்ப்புக் குரலையும் காட்டவில்லை. அப்படி எதிர்த்து குரல் கொடுக்காதது மட்டுமல்ல அப்பெண்தான் தவறான நடத்தையுள்ளவள் என்பது போன்ற கதைகளைக் கூறி தாம் எதிர்த்துக் குரல் கொடுக்காததற்கு காரணம் அதுதான் என்பது போலும் கதைத்துக் கொண்டிருந்தார்கள். அதனைத் தொடர்ந்து வீதியில் பெண்களை துன்புறுத்தும் நிகழ்வுகள் வேறும் நடந்து கொண்டிருக்கின்றன. பெண்கள் இதனையிட்டு பெரிதாக அக்கறை எடுக்காமல் விடுவார்களேயானால் வீதியில் ஆண்கள் பெண்களுக்கு அடிக்கும் சம்பவங்கள் சர்வசாதாரணமாகிவிடும்.

தவறான நடத்தையுள்ள ஒரு பெண்ணுக்குக் கூட அடிப்பதற்கு ஆணுக்கு உரிமையில்லை என்ற விடயம் கூட எம்மில் பலருக்கு தெரியவில்லை. இதே சம்பவங்கள் மேலைத்தேச நாடுகளில் எங்காவது நடந்திருக்குமேயானால் இவ்வாறு அடித்த ஆணுக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்கே போடப்பட்டிருப்பது மட்டுமல்ல அந்த ஆணுக்குரிய தண்டனையும் வழங்கப்பட்டிருக்கும். அவ்வளவும் மட்டுமல்ல அவனுக்கெதிராக பெண்களின் ஒருங்கிணைந்த எதிர்ப்பு ஊர்வலமே நடத்தி முடிக்கப்பட்டிருக்கும்.

எமது பெண்களால் ஏன் இவ்வாறு எதிர்த்து எதுவுமே செய்ய முடியவில்லை. தன்னைக் கொல்ல கணவன் முயன்றால் கூட அவனுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்கக் கூட பெண்களுக்கு துணிவு ஏற்படுவதில்லை. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணமாக விளங்குவது அவர்களின் மனங்களில் ஊட்டப்பட்டு பதிவிக்கப்பட்ட பழைமைக் கருத்துக்களேயாகும்.

'கணவன் தானே: அடிக்க உரிமை இருக்கிறது. அடிக்கின்றார்' என்று மனைவி நினைப்பதும், 'அப்பா தானே அவர் அடிப்பதில் என்ன தவறு இருக்கின்றது?' என மகள் எண்ணுவதும், அண்ணா தானே உதைத்தாலும நான் பொறுத்துக் கொள்ள வேண்டும்' என

தங்கை யோசிப்பதும் சாதாரண விடயங்கள் போலத் தெரியலாம். ஆனால் தாம் பெண்களாயிருப்பதால் தம்மீது செலுத்தப்படும் அடக்கு முறையின் ஓர் வடிவம் தான் இது என்பதை பெண்கள் ஒவ்வொருவரும் சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அரச படை தமிழீழப் பெண்களை பாலியல் வன்முறைக்குட்படுத்தினால் குமுறிக் கொந்தளித்து வெடிக்கக் கூடியவர்களாக எமது பெண்கள் இல்லாததும் வேதனைக்குரிய விடயமாகும்.

பெண்ணினத்தைப் பொறுத்தவரை இந்த உளப்பாங்கு அவர்கள் மீது திணிக்கப்பட்டுள்ள அடக்கு முறையின் ஒரு பாதிப்பு என்பதைப் பலர் புரிந்து கொள்வதில்லை. தனது தாயோ, சகோதரியோ, மகளோ சந்தியில் வைத்து ஒரு ஆணால் அடிக்கப்பட்டால் ஒரு பெண்ணால் குமுற முடிகிறது. குடும்பம் என்ற வட்டத்துக்குள் ஒருவருக்கு நிகழ்ந்தால் பாசம் இப்படி குமுற வைக்கிறது. ஆனால் அதற்கப்பால் அநீதிக்கெதிராக குரல் எழுப்பும் துணிவு கூட அவளுக்கு வருவதில்லை. ஏனென்றால் அப்படி அவள் வளர்க்கப்படவில்லை. சிறியவயதில் ஒரு அநியாயத்தைக் கண்டு குமுறி ஒரு பெண் கதைக்கப் புறப்பட்டால் கூட "நீ பொம்பிளைப் பிள்ளை இப்படி அடக்க ஒடுக்கமில்லாமல் உரத்துக் கதைக்கக் கூடாது" என்று பெற்றோர் தடுத்து விடுவார்கள். இளம் வயதில் அவ்வாறு ஏதாவது கதைக்கத்துடித்தால் இப்படிக் கதைச்சு வாய்க்காரி என்ற பெயரை எடுத்துப் போடாதை. பிறகு கலியாணம் கட்ட ஒருத்தரும் வரமாட்டாங்கள்" என்று சொல்லி வாய்க்கு பூட்டுப் போட்டுவிடுவார்கள்.

இப்படி படிப்படியாக அடக்கு முறைக் கருத்துக்களால் வளர்க்கப்பட்ட பெண்ணால் எப்படி திடீரென சமூகத்தில் நிகழும் அநீதிக்கெதிராக குரல் கொடுக்க முடியும்.

அது மட்டுமல்ல வீட்டில் ஏதாவது அசம்பாவிதங்கள் நடந்தால் "பெண் சரியாக நடக்காததால் அப்படி நடந்தது" என்ற பெரும்பழியை பெண்மீது சுமத்துவார்கள். இதற்கு உதாரணமாக 'பொம்பிளை சிரிச்சாப் போச்சு- புகையிலை விரிச்சாப் போச்சு' 'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே' என்று பெண்களை அடக்கப் பயன்படுத்தும் பழமொழிகளைக் கூறலாம். இப்படியான சூழ்நிலையில் வளர்க்கப்பட்ட பெண்களால் எப்படி ஆண்மேல் பழியைச் சுமத்த முடியும்? அவன் செய்தது குற்றம் தான் என்பதை எப்படி புரிந்து கொள்ளமுடியும்?

ஆண்களின் தொகையை விட அதிகமான அளவில் பெண்கள் வாழ்ந்தும் இன்று தேசவிடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு குறைவென்றால் அதற்கும் காரணம் பெண்கள் இவ்வாறு மூடக் கருத்துக்கள் ஊட்டப்பட்டு மனதில் பதிவிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட சூழ்நிலைதானாகும்.

இந்த மூடக் கருத்துக்களிலிருந்து பெண் முதலில் விடுவிக்கப்பட வேண்டும். அப்படி விடுவிக்கப்பட்டால் தான் தமது தேசம் அன்னியனால் ஆக்கிரமிக்கப்படுவதை தடுத்தே ஆகவேண்டிய கடமை தமக்கும் உண்டு என்ற உணர்வு அவர்களுக்கு உண்டாகும்.

முதலில் பெண்கள் தம்மீது பிரயோகிக்கப்படும் ஒடுக்குமுறை வடிவங்களை சரியாக இனங்கண்டு கொண்டு அவற்றுக்கெதிராகப் போராட முன்வர வேண்டும். ஒடுக்கு முறை அம்சங்களை தமது தலைவிதி என்று சொல்லிக் கொண்டு ஒவ்வொரு பெண்ணும் அடங்கி ஒடுங்கி பதுமைகளாக இருப்பார்களேயானால் அவர்கள் தமது வாழ்வை மட்டும் இழக்க மாட்டார்கள். சொந்த தேசத்தையும் தான் பறிகொடுத்து விட்டு நிற்க வேண்டி வரும்.

வீடு என்ற குறுகிய வட்டத்தை விட்டு வெளியே வந்து சமூகவேலைகளில் பங்கு பற்றும் போது வீட்டுக் கடமை மட்டும்தான் தனக்கு உண்டு என்ற மன நிலையை மாற்றி நாட்டுக் கடமையும் தனக்கு உண்டு என்ற உண்மையை ஒவ்வொரு பெண்ணும் உணர்ந்து கொள்ள வேண்டும். உண்மையை உணர்ந்துகொண்ட பெண்கள் ஓரணியில் இணையும் போது பலம் பொருந்தியவர்களாகின்றார்கள். அந்தப் பலம் அவர்களுக்கு அநீதியை எதிர்க்கும் தைரியத்தைக் கொடுக்கும்.

ராமசாமி:- என்ன சிவலிங்கம், கடையிலை அமர்க்களமாய் வியாபாரம் நடக்குது.

சிவலிங்கம்:- என்ன ராமசாமி, கடையைப் பார்க்க விசயம் விளங்கேல்லையோ? வித்தியாசம் ஒண்டும் தெரியேல்லையோ?

ராமசாமி:- ஓமோம்... விளங்குது ...விளங்குது... விற்பனைக்கு பெட்டையளை அதுவும் வடிவான பெட்டையளையெல்லோ பிடிச்சு விட்டிருக்கிறாய்.

சிவலிங்கம்:- ஓம் ராமசாமி. இந்தப் பெட்டையளைப் பிடிச்சு விட்ட பிறகு தான் என்ரை கடைக்கு வாடிக்கையாளர் கனபேர் வரத் தொடங்கிச்சினம். பெட்டையளையும் உம்மென்று கொண்டு நிக்கச் சொல்லேல்லை. வாற ஆம்பிளையளோடை நல்லாச் சிரிச்சு கதைக்கச்சொன்னன் கவர்ச்சியாய் அலங்காரம் பண்ணிக் கொண்டு நிக்க வேணும் எண்டு சொன்னன். பிறகென்ன மள மளவென்று வியாபாரம் நடக்குது.

ராமசாமி:- அப்படி யெண்டால் நல்ல சம்பளமெல்லோ குடுக்கவேணும்.

சிவலிங்கம்:- அதைப் பற்றிப் பிரச்சினையில்லை. நாய்க்கு எலும்புதுண்டு போடுகிற மாதிரி கொஞ்சக்காசு குடுப்பன். அப்பிடிக் குறை வாய்க் குடுக்கிறதுக்காகத்தான் கஷ்டப்பட்ட குடும்பத்திலையிருந்து பெட்டையளை எடுத்திருக்கிறன்.

ராமசாமி:- சம்பளம் கூட்டித் தரச் சொல்லி கேக்கிறதில்லையே.

சிவலிங்கம்:- அப்படிக் கேக்கிற அளவுக்கு பெட்டையளுக்கு துணிவில்லை. அதுகள் முட்டாளாய் இருக்கிற வரைக்கும் எனக்கு லாபந்தான்.

**பெண்களே!**

நீங்கள் கவர்ச்சிப் பொருளாக பயன்படுத்தப்படுவதையும் முட்டாள்களாகக் கருதப்படுவதையும் இனியும் இனியும் சகித்துக் கொண்டிருக்கப் போகிறீர்களா? இவ்வளவு இழிவாக மதிக்கப்படுகின்றீர்கள் என்பதை ஏன் உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

# மணலாறு சமரில் வீரச்சாவை எய்தியவர்கள்

கனத்த இருளுக்குள்ளும்
காற்றாய் விரைந்தோம்.
அடர்ந்த மழைக்குள்ளும்
அமைதியாய் ஊர்ந்தோம்.
தேசம் விடிந்திட இறுதியில்
தீயுள் கரைந்தோம்.



**02.09.1991 இல் வீரச்சாவை எய்தியவர்கள்**

**வீரவேங்கை. சுமித்திரா**
நடராசா தர்சினி
வட்டக்கச்சி, கிளிநொச்சி.
பிறப்பு:- 01-10-1975

**வீரவேங்கை. மாதுலா**
நல்லதம்பி கலாதேவி
வன்னேரிக்குளம், மாங்குளம்.
பிறப்பு:- 28-08-1972

**05.09.1991 இல் வீரச்சாவை எய்தியவர்கள்**

**லெப். சீமா**
சுந்தரலிங்கம் ராஜலட்சுமி
பொன்நகர், முள்ளியவளை.
பிறப்பு:- 23-06-1973

**2வது லெப். அருள்நங்கை**
மார்க்கண்டேயர் பிறேமலதா
ஊறணி, வல்வெட்டித்துறை.
பிறப்பு:- 19-12-1974

2வது லெப். டார்வியா
ஜோசப் மரியகொறற்றி
சக்கோட்டை, அல்வாய்தெற்கு.
பிறப்பு:- 27-12-1968

❋ ❋

வீரவேங்கை மனோகரி
சேதுபதி செல்வநிதி
இராமநாதபுரம், கிளிநொச்சி.
பிறப்பு:- 19-08-1973

❋ ❋

வீரவேங்கை சுபாதிகா
வேலுசாமி ஜெயசுமதி
1ம் வட்டாரம், பல்லக்குளம், குச்சவெளி.
பிறப்பு:- 13-06-1975

❋ ❋

வீரவேங்கை உமா
பரமசிங்கம் பாலரஜனி
செம்பியன்பற்று வடக்கு, செம்பியன்பற்று.
பிறப்பு:- 29-06-1975

❋ ❋

## 07-09-1991 இல் வீரச்சாவை எய்தியவர்

வீரவேங்கை வசந்தா
சண்முகநாதன் ஜெயவதனி
நாவலர் வீதி, மாதகல்.
பிறப்பு:- 13-02-1972

## 08-09-1991 இல் வீரச்சாவை எய்தியவர்கள்

கப்டன் அக்கினோ
இராசரத்தினம் கலைவாணி
கைதடி, நுணாவில்.
பிறப்பு:- 26-07-1968

❋ ❋

லெப். குணசீலி
தியாகராஜா சிவராஜி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
பிறப்பு:- 29-09-1973

❋ ❋

லெப். மதுரா
பரமு வடிவம்மாள்
மீசாலை வடக்கு, சாவகச்சேரி.
பிறப்பு:- 18-09-1971

❋ ❋

2வது லெப். சலுஜா
கணபதிப்பிள்ளை ரதீஸ்வரி
கரணவாய் தெற்கு, கரவெட்டி.
பிறப்பு:- 30-04-1971

❋ ❋

வீரவேங்கை பரிமளா
கந்தசாமி சந்திரபவானி
முத்துமாரி அம்மன் வீதி, திருநெல்வேலி.
பிறப்பு:- 02-05-1975



உறவுகளைப் பிரிந்தோம் - பாச
உணர்வுக்கு வரம்பும் கட்டினோம்
உண்மை உலகம் ஒன்று
உயிர்க்க வேண்டுமென்பதற்காக.

**09-09-1991 இல் வீரச்சாவை எய்தியவர்கள்**

**வீரவேங்கை ராணி**
செல்வநாயகம் சந்திரலோகினி
வட்டக்கச்சி, கிளிநொச்சி.
பிறப்பு:- 14-06-1975

❋ ❋

**வீரவேங்கை பிலகரி**
சரவணமுத்து இரத்தினகுமாரி
உருத்திரபுரம், கிளிநொச்சி.
பிறப்பு:- 10-12-1971

❋ ❋

**வீரவேங்கை கல்பனா**
கனகரத்தினம் அருள்நிதி
அல்வாய் தெற்கு, அல்வாய்.
பிறப்பு:- 26-12-1971

**2வது லெப். காயத்திரி**
இரட்ணம் இந்திராதேவி
7ம் குறிச்சி, அக்கரைப்பற்று.
பிறப்பு:- 13-06-1966

❋ ❋

**2வது லெப் மலைமகள்**
பிள்ளையான் வளர்மதி
கிரான் மட்டக்களப்பு.
பிறப்பு:- 22-03-1971

வீரவேங்கை சாந்தினி
நாகலிங்கம் ஜெயஜோதி
தம்பிலுவில், அம்பாறை.
பிறப்பு:- 27-05-1972

❋ ❋

வீரவேங்கை பிரவீனா
செல்வநாயகம் யசோதாதேவி
முகமாலை, எழுதுமட்டுவாள்.
பிறப்பு:- 13-08-1970

❋ ❋

வீரவேங்கை செல்வரூபி
பொன்னையா காளியம்மா
பன்குடாவெளி, மட்டக்களப்பு.
பிறப்பு:- 07-07-1967

❋ ❋

வீரவேங்கை ஜொய்சி
காளிமுத்து வாசுகி
7ம் வாய்க்கால், கிளிநொச்சி.
பிறப்பு:- 07-01-1975

## 12-09-1991 இல் வீரச்சாவை எய்தியவர்கள்

2வது லெப். மாலினி
சிவானந்தம் வாசுகி
3ம் வட்டாரம், முள்ளியவளை.
பிறப்பு:- 08-09-1974

வீரவேங்கை சியோ
தருமலிங்கம் நந்தினி
கரணவாய்தெற்கு, கரவெட்டி.
பிறப்பு:- 26-08-1974

❋ ❋

வீரவேங்கை ஏஞ்சல்
சுப்பிரமணியம் செல்வி
ஈச்சமோட்டை, கொழும்புத்துறை.
பிறப்பு:- 08-11-1974

## 14-09-1991 இல் வீரச்சாவை எய்தியவர்கள்


வீரவேங்கை உமா
ஆறுமுகம் சித்திராதேவி
பூவரசங்குளம், வவுனியா.
பிறப்பு:- 28-04-1974

❋ ❋

வீரவேங்கை சுதா
புலேந்திரன் ரஜனி
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.
பிறப்பு:- 07-03-1975

❋ ❋

வீரவேங்கை யூட்டி
ராஜரட்ணம் ஜெயதேவி
உடுத்துறை, தாளையடி.
பிறப்பு:- 25-04-1966



வீழ்ந்தவர்கள் எல்லோரும் விதையாகிப் போனதால் தான்
விடுதலைப் போர் இன்றும் தொடர்கிறது.

**15-09-1991 இல் வீரச்சாவை எய்தியவர்கள்**

**2வது லெப். மலர்விழி**
மயில்வாகனம் கிருபாதேவி
மூதூர், திருக்கோணமலை.
பிறப்பு:- 24-01-1970

❋ ❋

**வீரவேங்கை யுனைதா**
தங்கராசா வசந்தி
வாழைச்சேனை, மட்டக்களப்பு.
பிறப்பு:- - -1973

**16-09-1991 இல் வீரச்சாவை எய்தியவர்கள்**

**லெப். பூமதி**
இராசமாணிக்கம் பிறேமலதா
சந்தி ஒழுங்கை, வல்வெட்டித்துறை.
பிறப்பு:- 21-10-1974

❋ ❋

**2வது லெப். சார்ஜகா**
தங்கராசா மேரிமாக்கிரெட்
வட்டக்கண்டல், மன்னார்.
பிறப்பு:- 22-08-1972

**வீரவேங்கை சிரஞ்சீவி**
ஏகாம்பரம் வசந்தமணி
வன்னேரிக்குளம், கிளிநொச்சி.
பிறப்பு:- 24-08-1974

❋ ❋

**வீரவேங்கை டொறின்**
யோககுரு தவராணி
வேப்படி, வல்வெட்டித்துறை.
பிறப்பு:- 18-07-1966

❋ ❋

**வீரவேங்கை றொசானி**
சிவசுப்பிரமணியம் தங்கராணி
பொலிகண்டி, வல்வெட்டித்துறை.
பிறப்பு:- 26-05-1974

❋ ❋

**வீரவேங்கை லோஜி**
தருமலிங்கம் கௌரிமலர்
புனர்வாழ்வுத்திட்டம், மிருசுவில்.
பிறப்பு:- 17-05-1973

❋ ❋

**வீரவேங்கை காஞ்சனா**
அருமைத்துரை சாந்தி
சுதுமலைதெற்கு, மானிப்பாய்.
பிறப்பு:- 12-10-1973

❋ ❋

**வீரவேங்கை துலாஞ்சலி**
சோமசுந்தரம் சித்திராதேவி
புளியங்குளம், ஒட்டுசுட்டான்.
பிறப்பு:- 11-01-1971

**வீரவேங்கை றொசிற்றா**
சுப்பு செல்வி
பேசாலை, மன்னார்.
பிறப்பு:- 05-10-1975

❋ ❋

**வீரவேங்கை இதயா**
தம்பிராசா தேவரஞ்சினி
புளியம்பொக்கணை, கிளிநொச்சி.
பிறப்பு:- 14-05-1975

❋ ❋

**வீரவேங்கை ஜனனி**
கறுப்பையா கமலாதேவி
குருக்கள் மடம், மாதகல்.
பிறப்பு:- 04-08-1970

## 19-09-1991 இல் வீரச்சாவை எய்தியவர்கள்

**வீரவேங்கை காமராஜி**
இரசமையா ஆத்மஜோதி
முரசுமோட்டை, பரந்தன்.
பிறப்பு:- 02-02-1971

❋ ❋

**வீரவேங்கை மல்லிகா**
இராசலிங்கம் தனலட்சுமி
5ம் வாய்க்கால், கிளிநொச்சி.
பிறப்பு:- 14-10-1973

வளைக்கரம் நீட்டி
வளைய வரவுமில்லை.
வளைக்குள் இருந்து
வெந்து மடியவுமில்லை.
வலிமை கொண்டு
வெளியே வந்தவர்கள் - நாங்கள்
வாழ்வதற்காகவே
வீழ்ந்து போனவர்கள்.



❋ ❋

**20.09.1991 இல் வீரச்சாவை எய்தியவர்**

வீரவேங்கை கார்த்திகா
நடராசா வசந்தா
வேலணை கிழக்கு, வேலணை.
பிறப்பு:- 10-03-1970

வீரவேங்கை சிவகாமி
இலக்குமணன் யோசராணி
நீலியாமோட்டை, வவுனியா.
பிறப்பு:- 21-11-1972

வீரவேங்கை டென்சியா
பத்திநாதன் இலங்கைநாயகி
வெற்றிலைக்கேணி, முள்ளியான்.
பிறப்பு,- 05-01-1974

வீரவேங்கை சூரியா
அம்பலவாணப்பிள்ளை யோகேஸ்வரி
மூதூர், திருக்கோணமலை.
பிறப்பு:- - - 1975

**22-09-1991 இல் வீரச்சாவை எய்தியவர்கள்**

2 வது லெப் சங்கீதா
நடராசா வசந்தகுமாரி
நவாலிவடக்கு, மானிப்பாய்.
பிறப்பு:- 19-07-1972

வீரவேங்கை தர்மிலா
மகேஸ்வரகனம் மாலா
ஆழியவளை, தாழையடி.
பிறப்பு:- 02-03-1973

❋ ❋

வீரவேங்கை சுமங்கலி
விஜயரட்ணம் மல்லிகா
சந்தர்சர்வயல், இயக்கச்சி.
பிறப்பு:- 24-10-1975

❋ ❋

வீரவேங்கை ராஜினி
தியாகராஜா குயின்பத்மா
32, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
பிறப்பு:- 22-10-1972

❋ ❋

வீரவேங்கை ரூபமதி
மகாலிங்கம் வசந்தி
விநாயகபுரம், முழங்காவில்.
பிறப்பு:- 30-06-1975

❋ ❋

வீரவேங்கை ஜெனந்தினி
விநாயகமூர்த்தி செல்வராணி
3ம் வட்டாரம், முள்ளியவளை.
பிறப்பு:- 14-05-1973

## 23-09-1991 இல் வீரச்சாவை எய்தியவர்

2வது லெப். ரூபி
தம்பையா செல்வராணி
நாவற்காடு - வரணி.
பிறப்பு:- 24-08-1964

## 24-09-1991 இல் வீரச்சாவை எய்தியவர்

வீரவேங்கை யசிர்
ஆனந்தம் சியாமளாதேவி
தொண்டைமானாறு, யாழ்ப்பாணம்.
பிறப்பு:- 13-03-1973

❋ ❋

## 16-10-1991 இல் வீரச்சாவை எய்தியவர்கள்

வீரவேங்கை மதி
அருளம்பலம் மோகனாம்பிகை
கேணியடி, பத்தானை, மூளாய்.
பிறப்பு:- 25-03-1975

❋ ❋

லெப். மைலி
ஏரம்பு கிருஸ்ணகுமாரி
கருநாட்டுக்கேணி, கொக்கிளாய்.
பிறப்பு:- 17-03-1971

ஆனையிறவுச் சமரில் 04-08-1991 இல் காயப்பட்டு வீரச்சாவை எய்தியவர்.

வீரவேங்கை யோகா
கருப்பையா யசோதாதேவி
தோப்பூர், மூதூர்.
பிறப்பு:- 03-03-1972
வீரச்சாவு:- 16-10-1991

(கள்ளிச்சை வடமுனையில் அரசபடையினர் மீதான தாக்குதலின் போது வீரச்சாவை எய்தியவர்)

2 வது லெப். நிலா
கிருஸ்ணபிள்ளை நிர்மலாதேவி
குருமண்வெளி, களுவாஞ்சிக்குடி.
பிறப்பு:- 03-04-1973
வீரச்சாவு:- 27-10-1991

20.07.1991 இல் ஆனையிறவுச் சமரில் காயப்பட்டு வீரச்சாவை எய்தியவர்.

வீரவேங்கை சுஜே
பெருமாள் பானுவதி
காங்கேசன்துறை.
பிறப்பு:- 06-02-1969
வீரச்சாவு:- 19-12-1991



சொந்தங்களை விட்டு விலகுகின்றோம்
-- எங்கள்
சொந்த தேசம் எம்மை விட்டு
விலகிப் போகாமல் இருப்பதற்காக.

கொக்குத்தொடுவாய் கோட்டைக்கேணிக்கிடையில் இராணுவத்தினர் மீதான தாக்குதலில் 24.12.1991 இல் வீரச்சாவை எய்தியவர்.

2 வது லெப். நிருசுதா
சுப்பிரமணியம் சுசீலாதேவி
கிளிநொச்சி.
பிறப்பு:- 16-03-1970
வீரச்சாவு:- 24-12-1991

ஆனையிறவுச் சமரில் காயமடைந்திருந்து 28.10.1991 இல் வீரச்சாவை எய்தியவர்.

2 வது லெப். அசோகா
சிவகுரு இந்திரகுமாரி
பருத்தித்துறை.
பிறப்பு;- 23-10-1970
வீரச்சாவு:- 28-12-1991

# 'எப்போது பார்த்தாலும் சோம்பிக்கிடக்கும் சிங்கத்தை காட்டுராஜா என்று தேர்ந்தெடுத்தது யார்?'

*தளிரொன்றின் புதிய சிந்தனை இது.*

எமது விடுதலைப் போராட்டம் எமது தேசத்துக் குழந்தைகளைப் புதிதாக, புரட்சிகரமாக சிந்திக்க வைத்திருக்கிறது. ஏட்டுக்கல்வியால் திணிக்கப்பட்ட மந்த வாழ்விலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். திணிக்கப்பட்டதை அப்படியே ஜீரணிக்க விரும்பாது தேவையானதை மட்டும் உள்வாங்கிக்கொள்ளப் பழகிக் கொண்டுவிட்டார்கள்.

இவர்கள் எமது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகள். இந்தச் சிற்பிகள் சிந்தனைகளை அமுக்கி வைக்காமல் துணிவுடன் வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்கவேண்டும். தமது பிள்ளைகளின் நல்ல சிந்தனைகளை மேலும் வளர்க்க ஊக்கமளிக்க வேண்டியது ஒவ்வொரு பெற்றோரினதும் கடமையாகும்.

சுயமாக அவர்கள் சிந்திக்கட்டும். சுதந்திரமாக தமது எண்ணங்களை வெளிப்படுத்தட்டும்.

*தாய்மாரே!*

மேலும், மேலும் உங்கள் குழந்தைகள் ஆக்கபூர்வமாகச் சிந்திக்க வழி சமைத்துக் கொடுங்கள். அவர்களின் உள்ளங்களில் எழுகின்ற புதிய சிந்தனைகளை எழுதுங்கள்.

9ம் பக்கத்தின் பெட்டிக்குள் 4வது வரியில் சேர்த்துக் கொள்ளவும்

தத்துவங்களுக்கு...... அச்சாணியாக விளங்கும் இந்து மதக் கோட்பாடுகள் பற்றியும்......... மதத்தலைவர்கள், என்று திருத்தி வாசிக்கவும்.

# உரத்த குரலில்
# உரிமையுடன் கேள்

தத்தித் தத்தி
தளர் நடை பயின்று,
உள்ளம்
களித்திட,
சிரித்திடும் வயதினில்,
உடலில் பலமின்றி,
உதிர்ந்து கொண்டிருக்கும்
இளந்துளிரே,
அள்ளி அணைத்து
உனக்கு
உயிரமுது ஊட்டுதற்கு,
வழியில்லையே என்று
தவித்துத் துடிக்கும்
தாயின்
விழிநீர் துடைக்க
வலுவின்றி
அவதிப்படுகின்றாயா ?
ஆக்கிரமிப்புத் தீக்குள்
மொட்டுக்களும்,
மலர்களும்
கருகுதல் மட்டும் தான்
தொடரும் நிகழ்வு என்று
தீர்மானித்து விட்டாயா ?
இல்லை... இல்லை
நம்பிக்கையை மட்டும்
இழந்து விடாதே,
உன் தேசத்தில்
உனது சகோதரர்களிடம்
ஒரே ஒரு கேள்வியை
உரிமையுடன் கேள்.
உருக்குலைந்து போகும்
எங்களைக் காத்திட
இனியேனும் எழுந்து
போரில் இணைந்திட மாட்டீர்களா?
என்று உரத்த குரலில்,
அவர்களால் முடியும்
ஏனென்றால்
அவர்களும்
இந்நாட்டின்
உரிமையாளர்கள்.

(பின் அட்டைப் படக் கவிதை)



வாசகர்களிடமிருந்து அபிப்பிராயங்கள்,
ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

தொடர்புகட்கு:

**சுதந்திரப்பறவைகள்**

வெளியீட்டுப் பிரிவு,
கோண்டாவில்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

அன்பளிப்பு **15 ரூபா**

வெளியீடு: விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி